பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2020



## "என்னிடம் கவிதை தன் வடிவை அதுவே முன்மொழிந்து கொள்கிறது!"

– வெற்றிப்பேரொளி

## விரைவில் வெளிவரவிருக்கும் நூல்கள்










நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 ஏப்ரல் 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
அமின் மொஹமெட்
*இணையாசிரியர் :*
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
*நிர்வாக ஆசிரியர் :*
சஃபி மொஹமெட்
*ஆசிரியர் குழு :*
ஹிப்ஸுர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்
*ஆலோசகர்கள் :*
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# விடைகோடு கொரோனா

- பைஜுர் நிஷா

தேசம் விட்டு தேசம்
கண்டம் விட்டு கண்டம்
சுற்றுலா நீ வந்தாயோ?
பார் முழுதும் உன் பெயரை
பாராயணம் செய்கிறதே
ஊடகமெல்லாம் உன்முகமாய்
உலகமெலாம் பிரபலம் நீயாக
எத்தனை தவம் கிடந்தனையோ?
சுத்தத்தையும் சுகந்தத்தையும்
உயிர்பெறச் செய்த நீ
உயிர் கொல்லியானதேனோ?
உயிர் பயம் கூட்டி
உன்னால் பீதியடைந்தோர்
எள்ளி உன்னை நகையாடி
ஏளனம் செய்தோரை
பஞ்சாய் பந்தாடிய நீ
என்னிடம் கவிதையானாய்!
இன்னும் எத்தனை உயிர்தனை
உன்னுடன் அழைப்பாயோ
யாமறியோம் பராபரமே
பாரபட்சம் ஏதுமின்றி
அனைவரையும் தீண்டும் உன்னிடம்
காசினி கற்றிட வேண்டும்
தீண்டாமை ஒழிப்பு தன்னை
நிலை என்று நினைத்த
உயிரையும் பொருளையும்
நொடிபொழுதில் நொறுக்கி விட்டாய்
நீ இவ்வுலகின் அழிவா?
அல்ல புதியதோர்
உலகத்தின் தொடக்கமா
புரியவில்லயே??
பிரியும் போதுனக்கு
பிரியமுடன் விடை தருவர்
எம் மனித உறவுகள்........
விரும்பியே சொல்கிறேன்
விடைகொடு விரைவில்!

# பயம்

பயந்தோடும் மனிதர்கள்
உயிர்பிழைக்க தேடுகிறது
கொரோனா வைரஸ்...
- தாமு

144 தடையுத்தரவு
ஒரு சாண் வயிற்றுக்கு அல்லாடும்
அன்றாடங்காய்ச்சிகள்!
- மாதவன்

காலையில் வீட்டுக்குள்
மாலையில் தெருவில் கைதட்டல்
கூட்டத்தில் கொரோனா
- புதுவைத் தமிழ்நெஞ்சன்

கொரோனா பயம்
முகக்கவசம் மாட்டுகிறாள் சிறுமி
பொம்மைக்கு.
- மகிழ்நன் மறைக்காடு

கொரோனா விடுமுறை
குறி வைக்கிறேன்
கேரம் போர்டில் !
- கு. பாரத்

தவறான பொருளாதாரம்
மக்களை மறக்க செய்துவிட்டது
கொடிய கொரோனா
- தி.கவி. பன்னீர்

வீட்டுக்காவலில் வகையாய்
மாட்டிக் கொண்டோம்
கொரோனா தந்தத் தண்டனை!
- தமிழ்நெஞ்சம் அமின்

வீடற்றவன் நான்
வீதியில் இருக்கிறேன்
கொரோனாவே வீடடங்கு!
- தமிழ்நெஞ்சம் அமின்

# சிலையாக நிற்கும் கடவுள்

கருவூலத்திலிருந்தபடியே
வாசற்படியை வெறிக்க வெறிக்கப்
பார்த்துக் கொண்டிருக்கிறார் கடவுள்
ஒருத்தரையும் காணவில்லை.

**

முக்கால் பாகம் நிரம்பிய உண்டியல்.
அர்ச்சகர்கூட இல்லாத
அந்தக் கோயிலின்பக்கம்
திருடர்களும் வரத் தயங்குகிறார்கள்.

**

யாரும் தொடப் பயந்த
விபூதித் தட்டு நிரம்பியபடியே
இருக்கிறது.

**

கோயில் வளாகத்து
பூச்செடிகள் பறிக்க ஆளின்றி
இப்போதுதான்
முதற்தடவையாக மண்ணில்
விழுகின்றன.



**

நெடுநாள் ஓய்வெடுத்துக் கொள்ளும்
கோயில் மணி மௌனத்தால்
இப்போது கடவுளுக்கு நன்றி
சொல்கிறது.

**

வாகனத் தரிப்பிடம்
விளையாட்டு முடிந்த மைதானமாய்
பொழிவிழந்து கிடக்கிறது.

**

பக்தர்கள் தங்கள்
கோரிக்கையை அனுப்பிவைக்க
கடவுளின் மின்னஞ்சல்
முகவரி தேடி அலைந்து
கொண்டிருக்கிறார்கள்

**

அரச மரத்தைச் சுற்றிப்
பிள்ளைவரம் கேட்டுக்கொண்டிருந்த
பெண்களெல்லாம்
தாலி பாக்கியம் நிலைக்கத் தங்கள்
அரச ஆணையைப் பின்பற்றத்
தொடங்கிவிட்டார்கள்.

**

எவரேனும் இடுகின்ற
பணத்தின் வழியே பரவக்கூடும்
என்ற அச்சத்தில் யாசகர்களும்
காணாமல் போக
என்ன அதிசயம் இது
கண்ணுக்கே தெரியாத ஒரு
வைரசால் இத்தனை மாற்றமா
என்று மூக்கில் விரல்வைக்கவும்
அஞ்சி உண்மையிலேயே
இப்போது கடவுள்
சிலையாக நிற்கிறார்.

**





## மெய்யன் நடராஜ்

# காலத்தால் பிந்திய கவிதை

காலத்தால் பிந்திய கவிதை இலக்கிய வடிவம் ஹைக்கூ. சுமார் முந்நூறு ஆண்டுகளில் மும்மொழிகளைத் தனதாக்கிக் கொண்டு, உலகம் முழுவதும் பரவி கிடக்கிறது ஆங்கிலம். அதுபோல ஜப்பானில் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றி மிகச் சிறிய இலக்கியவடிவமான ஹைக்கூ உலகளவில் செல்வாக்கு பெற்றுத் திகழ்கிறது. தமிழ் இலக்கியத்திலும் இதன் தாக்கம் அதிகம்.

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது தமிழர் மரபு. ஹைக்கூவில் நாமெல்லாரும் கரைய வேண்டுமென விரும்புவது நஸீரா ஆப்தீன் அவர்களின் சிந்தனை மரபு. இந்நூல் மிக எளிமையாக தெளிவாக சிலமுன்னெடுப்புகளைக் கொண்டு விளங்குகிறது..

இந்நூலை வாசிக்கும் வாசகன் முதலில் ஹைக்கூவைப் பற்றிப் புரிந்துணர்வு கொள்ளல் வேண்டும். ஹைக்கூ அதன் வரலாறு, அதன் இலக்கணம், பண்புகள், வகைகள், அதன் தொடர்ச்சியாக வந்துள்ள புதிய வடிவங்கள் எனப் பலவகையாலும் வகைத்தொகைப் படுத்தி நேர்த்தியான முறையில் இந்நூலை வடிவமைத்துள்ளார் என்பது இந்நூலின் பெருஞ்சிறப்பு.

கவிதைகளைப் பற்றிச் சொல்லும் போது கவிதைக்குரிய எடுகோலை மிக அற்புதமாகப் பயன்படுத்தியுள்ளார். குக்கூ சென்றியு, பழமொன்றியு போன்ற வகைமைகள். என்ன மாதிரி அமைதல் வேண்டுமென ஒவ்வொன்றிற்கும் பக்கங்களைச் சீரிய முறையில் ஒதுக்கியுள்ளார். எல்லாச் செய்திகளையும் ஒருசேரக் குவிக்காமல் நேர்நிறையமைப்பில் கூறியிருப்பது நிறைவைத் தருகிறது.படிக்கும் வாசகனுக்குத் தொய்வில்லாமல் தொடர்ந்து வாசிக்கும் தருணத்தைக் கையளிக்கிறது.

## நூல் மதிப்புரை

தமிழகக் ஹைக்கூக்களின் முன்னோடிகளைத் தேடிப்பிடித்து கால அடுக்கில் வைத்துள்ளார். இருப்பினும் ஒருசிலர் விடுபட்டுள்ளனர் என்பது தவிர்க்க முடியா

| | |
|---|---|
| பக்கங்கள் | : 116 |
| விலை | : 300 / - ரூபாய் |
| மின்னஞ்சல் | : aslam2007@gmail.com |





நூல் வெளியீட்டு விழாவில் அமுதபாரதி, ஈரோடு தமிழன்பன் ஆகியோருடன் நூலாசிரியர் நஸீரா எஸ். ஆப்தின்.

ததாகிவிட்டது. அடுத்துவரும் நூலில் அதனைச் சீர் செய்து கொள்வார் என நம்புகிறேன்.

இந்நூலாசிரியர் பற்றிக் கூறவேண்டுமாயின் அல்ஹாஜ் ULM ஜெயினுதீன் பின்குறிப்பு அட்டையில் கூறி யிருப்பது அவரை முழுமையாக நாம் புரிந்துகொள்ள முடியும். ''இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சையில் தெரிவாகி 19 வருடங்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்தார். வாழ்வில் சந்தித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்ட துணிவும் எதிர்நீச்சல் புரிந்து முறியடித்த ஆற்றலும் 'இரும்புப் பெண்மணி' என உயரதிகாரிகள் சுட்டிக் கூறுமளவிற்கு சுட்டத்தக்கது. ஹைக்கூவில் ஆழமான தேடலை மேற்கொண்டு வழங்கியுள்ள தகவல்கள் வாசகர்கள் மத்தியில் வரவேற்பை நல்கும்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள் மிகச் சிறப்பானதொரு அணிந் துரையை நல்கியுள்ளார். ''தமிழ் இலக்கியமானது பிறமொழிப் பாவடிவங்களையும் அரவணைத்துக் கொண்டு அவ்வப்போது தன்னைப் புதுப்பித்துக் கொள்வதிலும் இளந்தலைமுறையினரை ஈர்த்துக் கொள்வதிலும் அது பின் நின்றதில்லை'' என்கிறார்.

''நஸீரா அவர்களால் மாதிரிக்குத் தரப்பட்டுள்ள மணிக்கூக்கள், ஹைக்கூக்கள், சென்றியூக்கள் என்பன இவரது கவியாளுமையை வெளிப்படுத்துவதாக உள்ளன''. என மேனாள் பேராசிரியர் செ. யோகாராசாவின் அணிந்துரை மேலும் இந்நூலுக்குச் சிறப்பு செய்வதாக அமைந்துள்ளது.

மகிழ்ந்துரை எழுதியிருக்கும் தோழி அன்புச்செல்வி சுப்புராசு "வெறும் கவிதை நூலாக மட்டுமன்றி இந்நூலை வாசிக்கும் வாசகர்களும் மாணவர்களும் புதிய சிந்தனையுடன் ஹைக்கூக்கவிதைகளையும் வேறு கவிதைகளையும் உருவாக்கும் வண்ணமாக, ஆகச் சிறந்த ஆய்வையும் செய்து வழங்கியுள்ளது பாராட்டுக்குரியது" தந்திருப்பது நிறைவைத் தருகிறது.

இந்நூலை அலசி ஆராய்ந்திருப்பவர் அனுராஜ் அவர்கள். எவ்வித பாரபட்சமின்றி இந்நூலின் நீக்குப் போக்குகளை வெள்ளிடைமலையெனத் தெளிவுப் படுத்தியுள்ளார்.

மேலும் கலாபூஷணம் அப்துல் கமீநெ, ஏறாவூர்... ஆசியுரை வழங்கியிருக்கின்ற அனலக்தர் மீராலெப்பை ஆகியோர் இந்நூலைச் சிறப்பித்துள்ளனர் என்பதும் பெருமையளிக்கிறது...

நல்லதொரு நூலை தெளிவாக எளிமையான புரிதலோடு வாசிக்க தந்திருக்கின்ற நஸீரா அவர்களை எத்தனை முறை வாழ்த்தினாலும் தகும். இந்நூலை அழகிய வடிவமைப்பில் செய்தளித்து பதிப்பித்திருக்கின்ற தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளுடன் வாழ்த்துகள்!

மதிப்புரை :

**முனைவர்.**

**பெண்ணியம் செல்வக்குமாரி**

புதுச்சேரி.

# ஆங்கிலத்தில் ஹைக்கூ கவிஞர்கள்

Formal haiku மற்றும் Informal ஹைக்கூ என்று இரண்டு முறைகளில் ஹைக்கூகளை எழுதி வருவதை அறிவீர்கள். Formal ஹைக்கூ (ஃபார்மல் ஹைக்கூ) என்பது ஹைக்கூவின் விதிமுறை படி சரியான அசைகள் அமைத்து முதல் அடியில் 5 அசைகளையும், இரண்டாம் அடியில் 7 அசைகளையும் மற்றும் மூன்றாம் அடியில் மீண்டும் 5 அசைகளையும் (மொத்தம் 17 அசைகள்) பொருத்தி எழுதுவது ஆகும்.) (5-7-5).

Informal Haiku (இன்ஃபார்மல் ஹைக்கூ) படைக்கும்பொழுது இத்தகைய விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அவை, முதல் அடியில் 2 அசைகளாக, இரண்டாம் அடியில் 3 அசைகளாக மற்றும் ஈற்றடியில் 2 அசைகளாகவோ அல்லது ஒவ்வொரு அடியிலும் இவ் வசைகளை கூட்டியோ, குறைத்தோ எழுதப்படுபவை ஆகும். Formal Haiku களை படைக்கும்போது 5-7-5 அசைகளை பொருத்தமாக அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தால் ஹைக்கூவின் காட்சி அமைப்பை சரியான கோணத்தில் சித்தரிக்க தவறி விடுகிறோம் என்பது நிதர்சனம். மேலும் இம்முறை ஹைக்கூகளை தமிழில் படைக்கும்போது, எழுதப் பட்ட ஹைக்கூவில் அசைகளை பிரித்துக் காட்டுதல் என்பது சற்று கடினமான பணியே ஆகும். மேலும் இவ்வகை Formal ஹைக்கூகள் நீண்டு காணப்படுவதால். ஆழ்ந்த தமிழ் மொழியறிவு உள்ளவர்கள் மட்டுமே இம்முறையில் ஹைக்கூ படைக்கும் வல்லமை பெற்றுள்ளனர்.

அத்தகையோரில் முதன்மையான ஹைக்கூ கவிஞர் திரு. வதிலைபிரபா அவர்கள் என்றால் மிகையாகாது.

இவர் தமிழ் மொழியில் இவ்விரண்டு வகை ஹைக்கூகளையும் இயற்றி பிற ஹைக்கூ கவிஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து வருகிறார். தமிழில் சில ஹைக்கூ நூல்களை எழுதி வெளியிட்டும், பல ஹைக்கூ நூல்களை தமது ஓவியா பதிப்பகத்தின் வாயிலாக பதிப்பித்தும் வந்துள்ளார்.

அண்மையில் அவர் 5-7-5 அசைகள் வருமாறு தமிழில் எழுதியுள்ள சில Formal Haiku (முறையான, சம்பிரதாய ஹைக்கூகள்) எனது ஆங்கில மொழி பெயர்ப்புடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து அதேபோல் தாமும் எழுத வேண்டும் என்று எண்ணமுள்ள, ஆனால் வாக்கியத்தில் உள்ள அசைகளை பிரிக்கவோ சேர்த்தெழுதவோ சிரமப்படும் ஹைக்கூ கவிஞர்கள் தமிழில் formal (சம்பிரதாய ஹைக்கூகளின்) அசைகளை எண்ணி எழுதிட கவிஞர் திரு வதிலை பிரபா அவர்களை அவரது உள்பெட்டியிலும், ஆங்கிலத்தில் 5-7-5 ஃபார்மல் ஹைக்கூகளை படைக்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்காக என்னை எனது மெசஞ்சர் பெட்டியிலும் தொடர்பு கொண்டு இது குறித்த ஐயப்பாடுகளை தீர்த்துக் கொள்ளலாம்.



வாருங்கள் கவிஞர் வதிலைபிரபா அவர்களின் சம்பிரதாய ஹைக்கூ களையும் அவற்றின் உங்கில மொழியாக்கத் தினையும் ஆராய்வோம்..

Haiku - 1 ( 5-7-5 )

முது வே னிற் கா லை ( 5 )
கிணற் றடி யில் கவிழ்ந் து கிடக் கும் ( 7 )
நீர் இறைக் கும் வா ளி! ( 5 )

a sum-mer morn-ing ( 5 )
ly-ing til-ted near the well ( 7 )
water draw-ing buck-et. ( 5 )

( water ல் 2 அசைகள் இருந்த போதிலும் ஆங்கிலேயர்கள் 'r' ல் முடியும் சொற்களில் 'r' ஐ உச்சரிப்பதில்லை. எனவே phonetic உச்சரிப்பின் படி 'வாட் (ட்') என்று ஒரே அசை கொண்டுள்ளததக water கருதப் படுகிறது )

Haiku - 2 ( 5-7-5 )

மின் மினிப் பூச் சிக ளைக் ( 5 )
கை களில் ஏந் திய வன் கண் களில் ( 7 )
தெறிக் கிற து மின் னல்! ( 5 )

the light-ning fla-shes ( 5 )
in the eyes of one who takes ( 7 )
fire-flies in the hands ( 5 )

Haiku - 3 ( 5-7-5 )

மெல் ல அசை கிற து ( 5 )
கோ டை மழைத் துளி யொன் று விழ, ( 7 )
மண் ணுள் கிடந் த விதை! ( 5 )

sways gra-du-al-ly ( 5 )
when rain drop in sum-mer falls ( 7 )
un-der-ground buried seed ( 5 )

Haiku - 4 ( 5-7-5 )

மரம் கொத் தும் பற வை ( 5 )
மா றா வடுக் களு டன் மரம்.. ஓ! ( 7 )
படம் பிடிக் கிறான் கலை ஞன். ( 5 )

the wood peck-er pecks ( 5 )
the man-go tree stands with scars ( 7 )
art-ist cap-tures shot ( 5 )

இப்பதிவை நிறைவுச் செய்வதற்கு முன்பாக ஓர் எச்சரிக்கை. இக்கட்டுரையைக் காணும், தமிழில் வழமைப் போல் சம்பிரதாயமற்ற informal ஹைக்கூகளை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள், 'நாமும் முயல்வோமே' என்ற எண்ணம் கொண்டு 'அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதீரர்கள். இத்தகைய formal haiku களை மாதத்திற்கு நான்கோ ஐந்தோ எழுதி உங்கள் பயிற்சிக்காக ஹைக்கூ குழுமங்களில் பதிவிடுங்கள். Formal haiku போட்டிகள் சர்வதேச அளவில் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ நடத்தப்படும்போது இத்தகைய பயிற்சிகள் உங்களுக்கு பெருந்துணையாக இருக்கும்.

அதை விடுத்து -

"Informal haiku படைப்பதில் புத்தன் நானே, formal haiku படைத்து பித்தன் ஆனேன்" என்று நொந்துக் கொள்ளும் நிலைக்கு ஆளாகாதீர். தயவு செய்து புரிந்துக் கொள்ளுங்கள் இந்த ஃபார்மல் ஹைக்கூ எழுதும் முறை உங்கள் பயிற்சிக்காக மட்டுமே இருக்கட்டும். தொடர்ந்து எழுதிக் குவிப்பீர்களானால் உங்கள் கவிதையின் வாக்கியங்களும் நீள்வதுடன், அசைகளை பிரித்தெண்ணுவதில் உங்கள் பொன்னான நேரமும் விரயமாகும். கவிதையின் தரமும் குறையும். மேலும் அசைகளை எண்ணிக் கொண்டு காட்சியமைப்பை கோட்டை விட்டு விடுவீர்கள். இரு மொழி வல்லமை உள்ள கவிஞர்கள் மட்டுமே Formal haiku எழுத முயலவும். தற்சமயம் நீங்கள் எழுதி பதிவிட்டு வரும் informal haiku களே உலகம் முழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட (universally accepted) ஹைக்கு இயற்றும் முறையாகும். அவற்றையே தொடர்க, வெல்க.

- வே. புகழேந்தி

# வலிகள் நிறைந்த வாழ்க்கை

அவள் பெண்ணாய் பிறந்தது
ஒரு குற்றம் என்றால்
மூத்த பெண்ணாய் பிறந்தது
பெருங் குற்றம் தான்

தோள்களைக் கொடுத்து உதவிடவும்
உடைந்த போது உதவிகள் செய்திடவும்
உறவுகள்
என்று ஒருவரும் துணையில்லை

பொதி முட்டை சுமப்பது தான்
சுகமான சொர்க்க வாழ்க்கை
என்று வாழ்க்கையை நகர்த்தும்
பெற்றோருக்கு பிறந்தது
அவளின் மிகபெரிய குற்றம்

இது தான் வாழ்க்கையோ
இப்படித்தான் வாழ வேண்டுமோ
என்று ஏட்டுக்கல்வி படிக்கும் போது
பணிக்குச் சென்றாள்

போக போகத்தான் தெரிந்தது
நாமும் பொதி மூட்டையை
சுமந்து செல்லும் கழுதையாக
மாறிக்கொண்டிருப்பதை

என்ன செய்வாள் அவள்
விடிந்ததும் பால்காரர் கணக்கு இருக்கிறது
மாதா மாதம் வீட்டு வாடகை கணக்கு
இருக்கிறது

அரிசி கடன் பாக்கியிருக்கு
ஆர்வமாய் சேர்க்கும் தீபாவளி
பங்கு சீட்டும் இருக்கிறது

அந்த ஆடைதான் பிடிக்குமோ
இந்த ஆடைதான் பிடிக்குமோ
அந்த நகைதான் பிடிக்குமோ
இந்த நகைதான் பிடிக்குமோ

என்று ஒவ்வொரு நாளையும்
அவளுக்காக வாழ்ந்ததை விட
அவள் தங்கைக்காக வாழ்ந்ததே அதிகம்

போதாத குறைக்கு
வாரம் ஒருமுறை தவறாமல்
பழுதாகி நிறக்கும்
வாகனமும் இருக்கிறது

பசி ருசி அறியாது என்பார்கள்
இங்கு ஏழ்மையும் தான்
ருசி அறியாது போகும்
கிடைத்ததை உண்டு
நாளைக்கு வேண்டும் என்று
ஓடுகிறாள்

அந்த மூன்று நாட்கள்
வீட்டுக்கூ தூரம் என்பார்கள்
அன்றும் அவள் வேதனையில்
அழுத நாட்களை விட
வாழ்க்கையை நினைத்து அழுததே அதிகம்

மாதம் இரண்டு நாட்கள்
விடுப்பு எடுத்துக்கொள்ளளாம்
என்று சொன்னதுதான் சொன்னார்கள்
தவறாமல் வந்துவிடுகிறது
ஏதோ ஒரு உடல் வலி

வலிகள் நிறைந்த வாழ்க்கை
என்று கண்ணீர் விடுவதை தவிர
அவளால் பெரிதாக
ஒன்றும் செய்யமுடியவில்லை
பாவம் அவள்

கடன் கொடுத்தோர் எல்லாம்
கதவை தட்டிவிடக்கூடாது
என்று தான் ஒவ்வொரு நாளும்
அவள் அவளது ஆசைகளை வெறுத்து
பணிக்கு செல்கிறாள்
இன்றைக்கும் அப்படியே.

**கவிஞர் மீன் கொடி கி. பாண்டிய ராஜ், திருப்பூர்**

கவிமாமணி திருக்குவளை வெற்றிப்பேரொளியுடன்

நேர்காணல் : தமிழ்நெஞ்சம் அமின்

# "என்னிடம் கவிதை தன் வடிவை அதுவே முன்மொழிந்து கொள்கிறது!"

## – வெற்றிப்பேரொளி

**கவிமாமணி வெற்றிப் பேரொளி அவர்களே...**

**உங்கள் தோழர்கள் பல்லாயிரவர்க்கும் நீங்கள் வழங்குகிற அன்பு பூச்செண்டுடன் உங்களை அணுகுகிற மகிழ்ச்சி எமக்கு வணக்கம் வணக்கப்பூச்செண்டு.**

**நீங்கள் ஆசிரியர். வினாக்கள் கேட்டே பழக்கப்பட்டவர். இப்போது தமிழ்நெஞ்சம் இப்போது உங்களை விடை கூறக் கேட்கிறது. விடைகள் என்னும் வீரிய விளைச்சலை எதிர் பார்க்கிறோம். இனி வினாப் படையெடுப்புஉங்கள் விடைகளால் முறியடிப்பு...**

வெற்றிப்பேரொளிஎன்னும்தனித்தமிழ் பெயர். இனிப்பை அள்ளிச்சொரிகிறது.. உங்கள் பெற்றோர் இட்ட பெயர் இதுவா?

கேள்வியின் முதல் பகுதி மகிழ்ச்சி யளிக்கிறது. நன்றி.

என் பெற்றோர் இட்ட பெயர் இதுவன்று! பேராய (காங்கிரசு)க் கட்சியில் தீவிரமாக இயங்கிய என் தந்தையார் ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேரிலிருந்த பற்றால் எனக்கு இட்டது "ஜெயப்பிரகாஷ்" என்ற பெயரையே!

பின்னர் புனைபெயர் ஒன்றைத் தேர்வு செய்யும் போது என் இயற்பெயரை நானாக "வாகையொளி" என்று தூயதமிழில் மாற்றினேன்!

மாணவர் மன்றத்தைச் சேர்ந்தவரும், வானொலியில் சிறுவர்களுக்கான "குருவிக் குடில்" நிகழ்ச்சி நடத்தியவருமான புலவர்

தணிகை உலகநாதன் அவர்கள் தான் "வாகை ஏன் ஒளிந்திருக்க வேண்டும்? நீங்கள் 'வெற்றிப்பேரொளி'யாய் விளங்குங்கள்!" என்று எனக்கு இப்பெயரைச் சூட்டி வாழ்த்தினார்!

**நீங்கள் ஆசிரியப்பணியில் ஆழங்காற்பட்டவர். தமிழ்ப் பணி போல ஆசிரிய இயங்களுக்கு நீங்கள் ஆற்றிய பணியை அறியலாமா?**

நான் 1980 இல் அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் திருக்குவளையில் இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்ந்தேன்.

அப்போதைய தலைமையாசிரியர் திரு. கு. வெங்கடாசலம் வழிகாட்டலில், பாவலர் கவிமாமணி க.மீனாட்சிசுந்தரம் அவர்களைப் பொதுச்செயலராகக் கொண்ட "தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்'' என்ற ஆசிரியர் இயக்கத்தில் இணைந்தேன். பணி நிறைவுக்குப் பின்னும் அவ்வியக்கத்தில் தொடர்கிறேன்!

தஞ்சை மாவட்டத்திலிருந்து நாகப்பட்டினம் மாவட்டம் பிரிக்கப்பட்டு, நாகப்பட்டினம் ஒன்றியத்திலிருந்து கீழையூர் ஒன்றியம் புதிதாக அமைக்கப் பட்ட பிறகு நான் ஆசிரியர் மன்ற ஒன்றியச் செயலராகப் பணியாற்றினேன்!

ஆசிரியர் மன்றம் தனித்தும், ஜாக்டீ பேரமைப்பாகவும், டிட்டோ ஜாக் போன்ற கூட்டமைப்பாகவும் நடத்திய போராட்டக் களங்களில் எல்லாம் முன்னணியில் நின்று செயல்பட்டிருக்கின்றேன், சிறைபட்டிருக்கிறேன்! அந்த அனுபவங்கள் பல உண்டு. எனினும் இரண்டை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மதிய உணவுத் திட்டத்திலிருந்து விடுவித்து, ஆசிரியர்களுக்கு கற்பிப்புப் பணி மட்டுமே வழங்க வேண்டும் - என்பதை முன்வைத்து நடத்தி வெற்றி கண்ட போராட்டம்!

அடுத்து நடுவணரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கோரி தொடக்கப் பள்ளிகள்தொட்டு கல்லூரிகள் ஈறாக ஒன்றிணைந்து நடத்திய ஜாக்டீ போராட்டம். 1985 இல் நடைபெற்ற இப் போராட்டத்தில் தளைப்பட்டு திருச்சி நடுவண் சிறையில் 30 நாள்களுக்கும் மேலாக அடைபட்டிருந்தேன். அந்த ஆண்டு தீபாவளித் திருநாள் திருச்சி சிறையில் என்பதும், மூன்று மாதக் கைக்குழந்தையாய் என் மகன் கபிலன் என்னைக் காண சிறைக்கு வந்ததும் மறக்க முடியாதவை!

ஒவ்வொரு நாளும் மாலையில் கவியரங்கம், பட்டிமன்றம், பல தலைப்புகளில் உரைவீச்சு, கலைநிகழ்ச்சிகள் என்று சிறைக்கோட்டத்தைத் தமிழ்க் கோட்டமாய் மாற்றியதில் எனக்கும் பங்குண்டு!



இந்த இரண்டு போராட்டங்களுமே ம.கோ.ரா. (எம்ஜிஆர்) முதல்வராக இருந்த போது நடைபெற்றவை.

செல்வி செயலலிதா முதல்வராக இருந்தபோது சிறைப்படாமல், போராட்டத்தை முன்னிருந்து நடத்தும் குழுவில் செயல்பட்டேன். காவல்துறையினர் தேட, அவர்களிடம் சிக்காமல் பல ஊர்களுக்கும் ஓடி, தலைமறைவாகத் திரிந்தபடி போராட்டத்தை வெற்றிகரமாக வழி நடத்திய அனுபவம் மறக்கவியலாதது!

கடந்த 2019 நவம்பர்த் திங்களில் நடைபெற்ற ஆசிரியர் மன்ற மாநிலத் தேர்தலில் ''இலக்கிய அணி மாநில அமைப்பாள'' ராகத் தேர்வு பெற்று என் இயக்கப் பணி இன்றும் தொடர்கிறது!

சந்தனம் மணக்கும் திருக்குவளைத் தமிழ் மண் உங்கள் பிறந்த ஊரா பணிபுரிந்த ஊரா?

சந்தனம் மணக்கும் திருக்குவளைத் தமிழ்மண் நான் பிறந்த ஊர் இல்லை. ''புகுந்த மண்''!

ஆம், என் காதல் வாழ்விணையர் க.பத்மாவதி பிறந்த ஊர். நான் பிறந்த ஊர் ஊத்துக்கோட்டை என்பது. அது இப்போது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது!

அதற்காக திருக்குவளையை பணி புரிந்த ஊர் என்று மேலோட்டமாக சொல்லிச் சென்றுவிட முடியாது. 16 ஆண்டுகள் இடைநிலை ஆசிரியராக, 12 ஆண்டுகள் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியராக பணி புரிந்தேன். பள்ளியின் முன்னாள் மாணவரான தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து பள்ளி நூற்றாண்டு விழாவையெடுத்து, வரவேற்பிதழ் படித்தளிக்கும்வாய்ப்பினைப்பெற்றேன்.மாவட்ட அளவில் சிறந்த பள்ளி என்ற விருதினைப் பெறச்செய்து, பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியுள்ளேன். தமிழக அரசின் டாக்டர் இராதாகிருட்டிணனன் (நல்லாசிரியர்) விருது பெற்று பள்ளிக்கும் ஊருக்கும் புகழ் சேர்த்துள்ளேன்! சொல்ல இன்னும் ஏராளம் உண்டு. விரிவுக்கஞ்சி இத்துடன் நிறுத்துகிறேன்!

ஆரூரைச்சுற்றியுள்ள அரிய தமிழ்ச் சொல் வேந்தர்கள் பலராயிற்றே உங்களோடு நேயமும் நட்பும் நெருங்கிய அன்பர்களைக் குறிப்பிடுங்களேன்.

ஆரூரைச் சுற்றியுள்ள அரிய தமிழ்ச் சொல்வேந்தர்கள் பலர். அவர்களில் சிலரோடு பழகும் இனிய வாய்ப்பு எனக்குற்றிருந்தது என் நற்பேரே!

நக்கீரன் இதழின் தலைமைத் துணையாசிரியர், இனிய உதயம் இலக்கியத் திங்களிதழின் இணையாசிரியர் கவிமாமணி ஆரூர்தமிழ்நாடன்என்நாற்பது ஆண்டுகால குடும்ப நண்பர். அவர் அமுதாவை காதல் பதிவுத் திருமணம் புரிந்தபோது நானும் என் காதல் வாழ்விணையர் பத்மாவும்தான் சான்றொப்பம் இட்டோம். இன்றும் இளமைத் துள்ளலோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் எங்கள் நட்புத் திருவிழாவை!

திருவாருரில் கலைஞர் பயின்ற (வா. சோ.ஆண்கள் மேல்நிலைப்) பள்ளியின் மேனாள். உதவித் தலைமையாசியர், பன்னூலாசிரியர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற நாகை மாவட்டத் தலைவர், சாட்டியக்குடி சிந்தனைப்புலவர் அ.ப.பாலையன், இந்து தமிழ் திசை முதன்மைத் துணையாசிரியர் கவிஞர் மானா. பாசுகரன், ஆவணப்பட இயக்குநர் கவிஞர் நேசமிகு இராசகுமாரன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிப் பொதுச்செயலர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மன்னை இரா.காமராசு, ஆற்றல்மிகு கவிஞர், சிறுகதையாளர், தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசியர் தம்பி தெ.வெற்றிச்செல்வன், த.மு.மு.க.மாணவரணி அமைப்பாளர் தம்பி பேராசிரியர் ஹாஜாகனி என்னும் கவிஞர் புதியவன், பெண்ணியம் போற்றும் கவிஞர் சாட்டியக்குடி இளம்பிறை, சிந்துக்கவிஞர்

வாய்மைநாதன், த.தொ.ப. ஆசிரியர் மன்றப் பொதுச்செயலர் தலைஞாயிறு கவிமாமணி க.மீனாட்சிசுந்தரம், திருவாரூர் நகைச்சுவை நாவலர் புலவர் சண்முகவடிவேல், சன் தொலைகாட்சி நேருக்குநேர் புகழ் திருத்துறைப்பூண்டி கவிஞர்தி.வீரபாண்டியன், நாகை நாவரசி புலவர் மு.மணிமேகலை, அவருடைய மகன் தொலைக்காட்சிப் பட்டிமன்றம் புகழ் நாகை நாகராசன், சிறந்த மரபுக் கவிஞர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், தகவல் முத்துகள் இதழாசிரியர் கவிஞர் நீரை.அத்திப்பூ, முகநூலில் சிறப்பிடம் பெற்றுள்ள கவிஞர் நீரை. பாத்திமா, பாப்பாக்கோவில் கவிஞர் பொன்மணிதாசன்... இப்படி நீளும் பட்டியல் மிகப் பெரிது. விடுபட்டவர்கள் பொறுத்தருள்க!

(திருவாரூர் தனித்தமிழ்ஞாயிறு த.சரவணத்தமிழனார், நாகை கவிஞர் மீனவனார் போன்ற மறைந்தோர் பலரை நான் இங்குக் குறிக்கவில்லை!)

**எத்தனையோ தமிழ் மன்றங்களை உருவாக்கி, உறவாக்கி இருப்பீர்களே ஒரு பட்டியல் தாருங்கள்.**

நான் உருவாக்கிய என்று சொல்ல முடியாவிட்டாலும், தொடக்கத்திலிருந்து ஒன்றிணைந்து செயல்பட்ட இலக்கிய அமைப்புகள் சில உண்டு.

முத்தமிழ் மன்றம் திருக்குவளையில் 40 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப் பட்டது. இந்தி எதிர்ப்புக் கவியரங்குகள், பட்டிமன்றங்கள், நூல்வெளியீடு, ஈழச் சிக்கல்களின்போது, மனிதச்சங்கிலி, பட்டினிப்போர், கண்டனக் கூட்டங்கள், தமிழ்க் காப்பு, காவிரிச்சிக்கல் போராட்டங் கள் பல முன்னெடுத்துள்ளோம்.

புலவர் பொன்னிவளவன், பொது வுடைமைக் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், பேராசிரியர் பெரியார்தாசன், உவமைக்கவிஞர் சுரதா, மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி இப்படிப் பலர்

# தெய்வீகமாய்...

மோகம் கொண்டு
தோளில் சாய்ந்து
யுகம் யுகமாய்...

காதல் கொண்டு
கானம் இசைத்து
உயிர் உயிராய்...

உணர்வு கொண்டு
பேரன்பில் ஆட்கொண்டு
தெய்வீகமாய்...

பிரபஞ்சத்தை
காதலின் வசப்படுத்தி
ஒய்யாரமாய்..
மூடிய இமைக்குள்
ஓடிய கதைகள்
சாமரமாய்...

ராதையுடன்
கிருஷ்ணன்
ஏகாந்தமாய்..

பார்த்த
என்
விழிகள்
தெய்வீகமாய்...
ராதே ராதே

பங்கேற்றுள்ளனர் எம்விழாக்களில். கவியரசு வைரமுத்துவை அழைத்து «கவிஞானி» என விருதளித்துள்ளோம்.

மண்ணின் மைந்தரான கலைஞருக்கு 80 கவிஞர்களைப் பங்கேற்கச்செய்து ''முத்துவிழா மகா கவியரங்கம், மாலை ஆறு மணி முதல் விடிய விடிய «கலைஞர் இலக்கிய கலை இரவு'', கலைஞர் 89- எனறு நடத்தி மகிழ்ந்துள்ளோம் .

## பொறுப்பாளர்கள் :

தலைவர்:
கொள்கைக்கவிஞர் குவளை.
சோ.கணேசன்,
செயலர்:
கவிமாமணி வெற்றிப்பேரொளி,
பொருளர்:
கவிஞர் சேவாலயா இரவிச்சந்திரன்,
துணைச்செயலர்:
பகுத்தறிவுக்கவிஞர்
பா. கவியரசன்
நெறியாளர்கள் :
புலவர் அ.ப.பாலையன்
கவிஞர் ஜோசப் ஸ்டாலின்

முத்தமிழ்க்கவிஞர் முல்லைப்பாண்டியன், கவிஞர் மு.இராதா, போன்றவர்களும் குறிக்கத் தக்கவர்கள்.

மறைந்த கவிஞர்கள்
பையூர்.பாநலவேந்தன்,
மழலைக்கவிமணி அருவி
நினைத்துப்போற்றப்படவேண்டியவர்கள்!

### தமிழ்தாய் இலக்கியப்பேரவை, தஞ்சாவூர்

நான் தலைவராகவும், கவிஞர் சுகன் செயலராகவும் செயல்பட்ட அமைப்பு.

தஞ்சை பெரியகோவில் வெளியில் இராசராசசோழன் புல்வெளியில் ஒவ்வொரு காரி (சனி)க்கிழமை மாலையும் ''படைப்பரங்கம்'' பலரை வளர்த்தெடுத்த அமைப்பு. 500 வாரங்களுக்கு மேல் படைப்பரங்கு நடைபெற்றுள்ளது.

திரைப்பாடலாசிரியர்கள் யுகபாரதி. மறைந்த வாசன் (தஞ்சை சீனிவாசன்), இயக்குநர் நடிகர் இ.வி.கணேஷ்பாபு போன்றவர்கள் இப்படைப்பரங்க மடியில் தவழ்ந்தவர்கள்!

### கவிதைவெளி

திங்கள் முழுநிலா நாளில் கூடி இலக்கியம் பகிர்ந்து மகிழ நான் நிறுவிய அமைப்பு.

### நூலக வாசகர் வட்டம்

திருக்குவளை கிளைநூலகத்தில் வாசகர் வட்டம் கண்டு அதன் தலைவராகவும் நிகழ்வுகள் பல நடத்தியுள்ளேன்!

உவமைக்கவிஞன் சுரதாவின் வளர்ப்பு மகன் போல் உலவியர் நீங்கள் என்று அறிகிறோம். நீங்கா நினைவுகளை நினைவு கூருங்கள்?

உவமைக் கவிஞர் சுரதாவின் வளர்ப்பு மகன்போல் உலவியவர் நீங்கள் என்று குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது் ஆனால் அது கொஞ்சம் மிகைப் படுத்தல்தான்.

தஞ்சாவூரில் இராமநாதன் மன்றத்தில் நடைபெற்ற என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பு ''கருப்பு நெருப்பு'' வெளியீட்டு விழாவின் சிறப்பு விருந்தினர் உவமைக் கவிஞர்தான்

அவர் வீடுகளில் கவிதைக் கல்வெட்டு வைக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தார். அந்த வகையில் 25ஆம் வெள்ளிவிழாக் கவிதைக் கல்வெட்டை எங்கள் திருக்குவளை கவிதை இல்லத்தில் திறந்து வைத்து மகிழ்ந்தார் சுரதா.

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நேரத்தில், திருக்குவளையை அடுத்த எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குளத்தில்



கவியுலகப் பூஞ்சோலை 4 ம் ஆண்டுவிழா மாமல்லபுரத்தில்... நெப்போலியன் காரைக்குடி கிருஷ்ணா, தமிழ்ட்நெஞ்சம் அமின், தென்றல் கவி ஆகியோருடன்...

தெப்பக்கவியரங்கை சுரதாவின் வழி காட்டுதலோடு நடத்தினேன்.

தெப்பவிழா நடத்தும் வழக்கமில்லாத இடத்தில் பாரதிதாசன் படத்தை மட்டுமே வைத்து, முதல் நாள் மாலை ஆறுமணிக்குத் தொடங்கி, மறுநாள் காலை ஆறுமணிவரை நடத்தப்பட்ட சாதனைக் கவியரங்கம் அது. விஜிபி உலகத் தமிழ்ச்சங்கம் அந்தமானில் இருநாள் தமிழ்மாநாடு நடத்தியது.. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், சுரதா, கவியரசு நா.காமராசன், இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டோம். அந்தமான் சென்று திரும்பும் கப்பலில் சுரதா தலைமையில் நடைபெற்றது ''கப்பல் கவியரங்கம்!''அதில் நான் உட்பட பலரும் கவிதைப் படித்தோம்!

திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை வரை ''தொடர்வண்டிக் கவியரங்கம்'' சுரதா தலைமையில் நடத்தினேன்.

சுரதா 80 முத்துவிழாவை 80 கவிஞர்கள் பங்கேற்க அவர் பிறந்த பழையனூரில் அவரை அழைத்து நடத்தினேன். தான் பிறந்த ஊரில் தன் முத்துவிழாவை நடத்தியதற்காக பெரிதும் மகிழ்ந்து என்னைப் பாராட்டினார் ஐயா.

கவிஞர்ஆரூர்தமிழ்நாடனின்சூரியனைப் பாடுகிறேன் நூல் வெளியீட்டு விழாவிற்காக திருக்குவளைக்கு தன் துணைவியார் திருமதி சுலோசனா அம்மையாருடன் வந்த சுரதா ஒரு வார காலம் இந்த எளியவன் வீட்டில் தங்கியிருந்தார் என்பது எங்கள் வாழ்வின் வரம்.

சென்னையில் அவர் மறைந்தார் என்ற சேதி தாதமதமாகவே எனக்குக் கிடைத்தது. திருக்குவளையிலிருந்து அழுதபடி புறப் பட்டேன். மாலை உதயம் திரையரங்கம் அருகில் இறங்கினேன். சாலையில் பூக்கள் இறைந்து கிடந்தன. இப்போதுதான் இறுதி ஊர்வலம் சென்றது என்றனர். உடன் ஒரு தானியில் கண்ணம்மாபேட்டை இடுகாட்டிற்கு விரைந்தேன். அங்குதான் அவரின் பொன்னுடலைத் தாங்கிய வண்டி நின்றிருந்தது. உடன் ஓடிப்போய் வண்டியிலிருந்து இறக்கி அவர் பூவுடலை மின்தகன மேடைவரை தோள்கொடுத்துச் சுமந்து சென்றேன். என் தந்தையார்



## தொடரும் கேள்விகள்

விழிவழிக் கனவுகள்
அரங்கேறுமா? விரல்வழிக்
கவிதைகள் குடியேறுமா?
தொடுகையில்
உயிர்களும் சேர்ந்திடுமா?
அது தொடர்கையில்
உறவுகள் வேர் விடுமா?
ஒரு நாளொடு
உணர்வுகள் அடங்கிடுமா?
இல்லை நூறு ஜென்மங்கள்
தானிது தொடர்ந்திடுமா?

**வஃபீரா வஃபி**
இலங்கை

உடலைக்கூட சுமந்தறியாத எனக்கு உவமைக் கவிஞரின் தூயவுடலைச் சுமக்கக் கிடைத்ததால்தான் என்னை வளர்ப்பு மகன் என்று சொன்னீர்களோ... என்னவோ!

தமிழ் நாடெங்கும் அவருடன் சுற்றி வந்த எனக்கு, சொல்லாமல் விடுபட்ட நிகழ்வுகள் மேலும் நிறைய உண்டு. பிறிதொரு வாய்ப்பில் பகிர்வேன்!

மரபுப்பாக்கள் எழுதும் வல்லமை. புதுக்கவிதைகளிலும் புனைவுகள். நீங்கள் உளம் வியந்து ஈடுபடும் தளம் எது?

கவிதை என்பது எனக்குள் இயல்பாகப் பூப்பதாகும். கவிதை எழுத எனக்கு அமைதியானச் சூழல், குளிர் அறை. மயக்கப் பொருட்கள் எவையும் வேண்டா! மணவிழா அரங்கிலும். துக்க வீட்டிலும் கூட எழுதுவேன். சொல்லப் போனால் பேருந்துப் பயணங்களில்தான் அதிகம்.

அதேபோல கவிதை வகைமையையும் நான் தீர்மானிப்பதமில்லை. தன் வடிவை அதுவே முன்மொழிந்து கொள்கிறது!

மரபு, புதிது, நவீனம். அய்க்கூ- அனைத்துத் தளங்களிலும் எளிதாகப் புகவும், வலிமையாகப் பயணிக்கவும் என்னால் முடிகிறது..

இதற்கு என்னுடைய தீராத வாசிப்பு வேட்கையே காரணமென்று நம்புகிறேன். குறள், சிலம்பு, கம்பன், சங்க இலக்கியங்கள், பக்திப் பனுவல்கள் ஒன்றையும் விடமாட்டேன். இவற்றின் அசத்தும் சொல்லாட்சிகளும், படிமங்களும் எனக்கான கச்சாப்பொருள்களாகின்றன.

சிற்சில வடிவங்களை அந்தந்தத் தேவைகளுஞ்க்கேற்ப திட்டமிட்டுக் கையாள் கிறேன். எனினும் உளம் விரும்புவது புதுக்கவிதை வாசத்துடன் மரபுமலர்களின் பூப்பைத்தான்!

தனித்தமிழ் ஆற்றல் உடைய நீங்கள் அவ்வப்போது பிறமொழிச் சொற்களைக்கலப்பது தொண்டை யில் சிக்கிய துரும்பு போல இருக்கிறதே. சொல்பருக்கைகள் என்னும் நூலில் விரவியுள்ள மொழிக்கலப்பை தவிர்த்து இருக்கலாம் என்று தோன்றியது உண்டா?

“தனித்தமிழ் ஆற்றல் உடைய நீங்கள் அவ்வப்போது பிறமொழிச் சொற்களைக் கலப்பது தொண்டையில் சிக்கிய துரும்புபோல் இருக்கிறதே?” - இந்தக் கேள்வி ஒரே நேரத்தில் மகிழ்வையும் துயரையும் தூவுகின்றது.

மகிழ்வுக்கு உங்கள் தனித்தமிழ் பற்றும், துயருக்கு “தொண்டையில் சிக்கிய துரும்பாக” மாறிஉங்களைத்தொல்லைபடுத்துகின்றேனே எனும் தன்னிரக்கமும் காரணங்களாகும்.

நான் தொடக்கக் காலத்திலிருந்து தனித்தமிழ் வழியில் வந்தவன் இல்லை, நாற்பதுநாற்பத்தைந்துஅகவைவரைகலப்புத் தமிழிலேயே புரண்டு கொண்டிருந்தவன் என்ற உண்மையை நேர்மையோடு உங்களிடம் ஒப்புக் கொள்கிறேன்.

திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத் தலைமை ஆசான் தனித்தமிழ் நாவலர் த.ச.ஐயாவின் தொடர்பு ஏற்பட்ட பிறகுதான் நான் தனித்தமிழ்ப் பக்கம் திரும்பினேன்.

என்னுடைய மூத்த மகள் பெயர் பவித்ரா. இளையமகள் கலைவாணி. அடுத்த மகன் பெயர் கபிலன். இந்தப் படிநிலை என் தனித்தமிழ் வளர்ச்சிப் போக்கைக் காட்டும்.

இல்லம், மேடை, பொதுவிடங்களில் இயன்ற அளவு தனித்தமிழையே பயன் படுத்துகிறேன்.

நீங்கள் குறிப்பிடும் என்னுடைய, “சொல்பருக்கைகள்” கவிதை நூல் வெளி யீட்டின் போதே தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசியர் மன்றப் பொதுச்செயலர் பாவலர் க.மீனாட்சிசுந்தரம், நூலில் பிறமொழிச் சொற்கள் கலப்பைச் சுட்டிக் காட்டியும், கண்டித்தும் கருத்துரை வழங்கினார் .

அந் நூலில் பிறமொழிச் சொற்களை வலிந்து திணித்திருக்க மாட்டேன்.

- எதுகை மோனைக்காகப் பயன்படுத்தி யிருப்பேன்.
- மக்களிடையில் அதிகப் புழக்கத்தில் உள்ள (பிறமொழிச்) சொற்களை, கவிதையின் எளிய புரிதலுக்காக கையாண்டிருப்பேன்.
- சில சொற்கள் தமிழோடு இரண்டறக் கலந்து விட்டிருப்பதை விலக்காமல் விட்டிருப்பேன்.
- தமிழாஇல்லையாஎன்றவிவாதத்திற்குரிய சொற்களையும் அரவணைத்திருப்பேன். (கவிதை என்ற சொல் தமிழ்தான் என்பவர்களும் இருக்கிறார்கள். அதை ஒதுக்கிப்பாவலரைமட்டும்பயன்படுத்தும் நண்பர்களும் எனக்குண்டு!)

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அளவு எனக்குத் தனித்தமிழ்ப் பயிற்சி இல்லை. அத்திசை நோக்கிப் பயணிக்கவே அவாவு கிறேன். இந்த நேர்காணல் மொழிக்கலப்புப் பயன்பாட்டை என்னிலிருந்து களைய மேலும் உந்து ஆற்றல் தரும் என நம்புகிறேன். நன்றிப்பூச்செண்டு தோழர்!

முகநூல் குழுமங்கள் நடத்தும் விழாக்களில் உங்கள் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறதே. இளைஞர்களுக்கு உங்கள் பட்டறிவுப் பிழிவாக உரைப்பவை யாவை?

“முகநூல் குழுமங்கள் நடத்தும் விழாக் களில் உங்கள் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறது!” என்ற உங்கள் கணிப்புக்கும், பாராட்டுதலுக்கும் அன்பு மகிழ்ச்சி நன்றி.

முகநூலில் குழுமங்கள் எண்ணிக்கை யில் நிறைந்தோங்கி உள்ளன. அவற்றில் சிலவற்றுடன் மட்டுமே எனக்குத் தொடர்பு உண்டு.

முகநூல் குழுமங்கள் இன்னும் என்னை முழுமையாகப் பயன்படுத்திக்




கொள்ளவில்லை. நானும் படைப்பு படிப்பு பயணமென இருப்பதால் முகநூல் பக்கம் அதிகம் கவனம் செலுத்துவதில்லை.

இளைஞர்களுக்கு உங்கள் பட்டறிவுப் பிழிவாக உரைப்பவை யாவை என்று கேட்கின்றீர்கள். மகிழ்ச்சி.

ஆனால் நானே இளைஞன்தானே! நானெப்படி? அறிவுரையாக இல்லாமல் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.உலகில் நல்லது கெட்டது என்று மட்டுமே உண்டு. இரண்டுக்கும் நடுவில் ஏதுமில்லை. அரசியல், மதம் / மதச்சார்பின்மை, குமுகம் (சமுதாயம்) எதிலும் உங்கள் மனச்சான்றின்படி ஒன்றை ஆதரித்து நில்லுங்கள். அதை உறுதிபட உலகிற்குச் சொல்லுங்கள். மாறாக நான் நடுநிலை வகிக்கிறேன் என்று ஊரை ஏமாற்றாதீர்கள்! அப்படி ஒன்றே இல்லை! (வள்ளுவர் கூறும் நடுவுநிலைமை வேறு!)

முகநூலில் பல குழுமங்கள் நிறைய கவிதைப் போட்டிகளை நடத்திச் சான்றி தழ்களை அளிக்கின்றன. அப்போட்டி களில் பங்கேற்கும் போது உங்கள் கவித்திறனையும், மொழிவளத்தையும், கற்பனைச் செழிப்பை யும், புதிய புதிய உத்திகளையும் மேம் படுத்திக் கொள்ள அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் படைப்புலகில் தனித்துத் தெரிவீர்கள். தொடர்ந்தும் இயங்குவீர்கள்!

மாறாக நாலுவரி கிறுக்கி, சான்றிதழ் பெறுவதை இலக்காகக் கொள்ளாதீர்கள். அப்படிச் செய்தால் 500, 1000 சான்றிதழ்கள் பெற்ற பின்பு உங்களுக்குள் முதலில் அலுப்பும் தேக்கமும் தோன்றும். பின் இந்தச் சான்றிதழ்களால் என்ன பயனென்னும் கேள்வியும் விரக்தியும் பிறக்கும். பிறகு இவற்றை விட்டு விலகி ஓடநேரிடும்!

எனவே கவனம்! அடுத்து முகநூல் குழுமங்கள் ஆண்டுவிழா என்று வந்து விட்டால் ஒவ்வொரு முறையும் கவியரங்க அமர்வுகள், 100, 150, 200 பேருக்கு விருதுகள் - இவற்றை மீறிச் சிந்திப்பதே இல்லை! அனைத்துக் குழுமங்களிலும் ஆண்டுதோறும் இந்த 100 - 200 பேர்தாம் திரும்பத் திரும்ப கவிபாடுபவர்கள், விருதாளர்கள். விருதுகள் பெயர்களிலோ, விருது வடிவமைப்புகளிலோ பெரிய வித்தியாசத்தைக் காணவே முடியாது!

முகநூல் குழுமங்களே... குழுமங்களே... இந்தக் குண்டுச் சட்டியிலிருந்து வெளியே வாருங்கள்!தற்சிறையைஉடைத்தெறியுங்கள்!

புதிய சிந்தனைச் சாளரங்களைத் திறந்து விடுங்கள்!

**உங்கள் இறுதி முறி தங்கள் முற்போக்கு எண்ணங்களில் முழுமையான பதிவாக இருக்கிறது. நீங்கள் நாத்திகரா ?**

என்னுடைய ‘‘இறுதி முறி’’ குறித்த உங்கள் கருத்திற்கு நன்றி.

நீங்கள் நாத்திகரா? எனும் வினாவுக்கு நேரடியான விடை ‘‘ஆம்’’ என்பதே! என் நாத்திகம் என்னுள் இருந்து சுடர்விட்டதே!

நான் ஆத்திகக் குடும்பத்திலிருந்து வந்தவன். திருக்குவளையில் பகுத்தறிவாளர் கழகத்திற்கு எதிராக ‘‘தெய்வநெறிக் கழகம்’’ கண்டவன். மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக மாலை போட்டுக், கடுமையாக விரதமிருந்து சபரிமலை ஏறிஇறங்கிய சாமியாக இருந்தவன். திருக்குவளையில் சிறிய ஐயப்பன் கோவில் கட்ட உடன்நின்றவன்.

நான் மற்றவர்களால் நாத்திகப் பாதைக்கு அழைத்துச் செல்லப் பட்டவனில்லை! பக்தித் தோலை மாந்த நேயக் கத்தியால் உரித்து உரித்து நாத்திகப் பிறப்பெடுத்தேன்!

கடவுள் இல்லை என்பாருக்காக மட்டுமல்ல, கடவுள் உண்டு என்று நம்புபவரின் உரிமைக்காகவும், நலத்திற்காகவும் உழைப்பதைக் கொள்கையாக ஏற்றுநடப்பவன்! போதுங்களா ஐயா!

**உங்களின் வாழ்க்கை உங்களுக்கு நிறைவைத் தருகிறதா? நீங்கள் யாருக்காவது நன்றி தெரிவிக்க விரும்புகின்றீர்களா?**

உறுதியாக நான் நிறைவான வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நல்ல குடும்பம். சிறந்த பிள்ளைகள். மருமக்கள். இனிய பெயரக் குழந்தைகள். தாங்கும் உறவுகள். அரிய நண்பர்கள். தொந்தரவு தராத உடல்நலம். சொந்த வீடு. தேவைக்குரிய செல்வம்.

ஓரளவு பெயரும் புகழும் மதிப்பும். பேர் சொல்லும் கவிதைப் புத்தகங்கள். போதாதா?

என் உயிர்த் தோழர் சிற்றிதழ்ப்போராளி கவிஞர்சுகன்தன்ஐம்பதாம்அகவையிலேயே புகழுடம்பு எய்திவிட்டார். நான். எழுபதை எட்டித் தொடப்போகிறேன். இயற்கையும் என்னிடம் கருணைகாட்டுகிறது. போதாதா!

அடுத்து நான் நன்றி சொல்ல அல்ல... அன்புகூர ஒருவர் உண்டு.

அவர் என் காதல் வாழ்விணையர் பத்மாவதி. சற்றொப்ப சுழியனிலிருந்து தொடங்கியது எங்கள் காதல் கடிமண வாழ்வு. அதை இந்த நாற்பதாண்டுகளில் நூற்றுக்கு அருகில் கொண்டு செலுத்தியிருப்பவர் அவர்தாம்.

மூன்று மக்களை ஈன்று வளர்த்து படிக்க வைத்து, திருமணம் முடித்து, வீடு கட்டி இன்று பெயரப்பிள்ளைகளுடன் என்னையும் சேர்த்துத் தாங்கிக் கொண்டிருக்கும் உழைப்பு ஊற்று. அவர்தான் என் பள்ளிப் பணிகளில் சிகரம் தொடவும், இலக்கிய வானில் சிறகு விரிக்கவும் வலிவு

‘‘உலகில் நல்லது கெட்டது மட்டுமே உண்டு! இரண்டுக்கும் நடு என்று ஏதுமில்லை!’’

- வெற்றிப்பேரொளி



பாவேந்தர் பாரதிதாசனன நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் பரிசு பெறுவதற்குமுன் திருவாரூர் கவிஞர்கள் தலைவர் கலைஞரை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துபெற்ற இனிய தருணம்

தந்த / தரும் என்றன் ஆற்றல் அணுஉலை!

அவருக்குத் தருவதற்கு தேய்பிறை காணாத காதல் முழுநிலவையும், கொஞ்சம் புன்னகை விண்மீன்களையும் அன்றி வேறெதுவுமில்லை என்னிடம்!

இந்த நேர்த்தியான நேர்காணல் வழியாக என் வாழ்வில் ஒரு பகுதியை தமிழ்நெஞ்சம் வாசகர்களிடம் கொண்டு செல்லும் ஆசிரியர் நிர்வாகி கவிஞர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும், ஆசிரியக் குழுவினருக்கும் என் நன்றிப்பூச்செண்டு! தமிழ்நெஞ்சம் வாசகத் தோழமையினருக்கு நிறை அன்பும், நல் வணக்கமும் வாழ்த்தும்!*

மிக மகிழ்ச்சி கவிமாமணி அவர்களே தங்களின் தமிழ்ப்பணி சிறக்க தமிழ்நெஞ்சம் உளமார வாழ்த்துகிறது.. ■



# முத்தமிழே





முத்தமிழே, முத்துமணி யார வித்தே!
வித்தகமே, வெற்றிவிளை யாடும் சித்தே!
சித்தமெல்லாம் வாசமள்ளும் பூவின் கொத்தே!
கொத்துமெழில் பேரழகே. கோடிச் சொத்தே!
சொத்தினுக்குள் சொத்துவரும் நாதச் சத்தே!
சத்தமில்லா மௌனமொழி கொண்டேன் பித்தே!
பித்தனுக்கும் ஞானமொழி சொன்ன அத்தே!
அத்திமுகத் தோன்வளர்த்த ஆழி முத்தே.

எத்தனையோ மொழிபிறந்த இந்த மண்ணில்
என்றுவந்தாய் என்றறியக் கூடு தில்லை.
அத்தனைக்கும் தாய்மொழியாய் உன்னை யன்றி
ஆருளர்சொல்... ஆதியந்தம் வென்றாய் இன்றும்
முத்தமிழாய் எண்திசையும் ஆளு கின்றாய்!
முடிவில்லா முதல்நீயே முற்றும் நீயே.
சித்தமெலாம் நிறைந்தவளே எங்கள் தாயே
செந்தமிழாய் முந்திவந்த முத்து மாரி.

முன்னாலும் பின்னாலும் உன்னைப் போல
மூச்சோடு கலந்தமொழி எங்கும் காணேன்.
தொன்மைமொழி யானாலும் நித்த நித்தம்
துளிர்க்கின்ற புத்திளமை உன்னில் கண்டேன்.
உன்பாதம் சரண்டைந்தேன் எண்ணம் தன்னில்
உருவாகிக் கருவாகி மண்ண ளந்த
அன்னையுனை நான்மறவேன். கால காலம்
ஆல்போலத் தழைத்துநிற்பாய் நீடு வாழின்

**“அகன்” அனுராதா கட்டபொம்மன்.**
திருச்சி

# கடன்



ஜி.ஆசிப் அலி

நசீரும், தவ்பீக்கும் பஜாரில் எதிரெதிரே மளிகைகடைவைத்துநடத்தும்வியாபாரிகள். கடந்த சில நாட்களாக வியாபாரம் கொஞ்சம் டல்லடிக்க ஆரம்பித்திருந்தது. இருவருக்கும் இடையே வியாபாரத்தில் போட்டி இருந்தாலும், இருவரும் நல்ல நண்பர்களாகவே இருந்தார்கள்.

“அண்ணே.. நம்ம கடைகளைக் கொஞ்சம் விரிவு படுத்தினா என்ன? இன்னும் நிறைய பொருட்களை வாங்கிப் போட்டாத்தானே வாடிக்கையாளர்கள்கூட நிறைய வருவாங்க.” என்றான் நசீர்.

“நீ சொல்றது சரிதான். ஆனா, அதுக்கு நிறைய பணம் தேவைப்படுமே.” என பதிலளித்தான் தவ்பீக்.

“ஏண்ணே, நான் ஒரு வழி சொல்லட்டா?”

“சொல்லு?”

“நாம கொஞ்சம் கடன் வாங்கி தொழிலை அபிவிருத்தி செஞ்சா என்ன?”

“நல்ல யோசனைதான். யார் நமக்குக் கடன் கொடுப்பாங்க?”

“அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன்.”

“பேங்குக்குப் போனா ஷ்யூரிட்டி இல்லாம லோன் கிடைக்காது. அதுக்குப் பதிலா நம்ம ஊர் செல்வந்தர் ஷப்பீர் பாய் கிட்ட கடன் கேட்டா அவர் கொடுப்பாருங்கற நம்பிக்கை எனக்கிருக்கு.”

நசீர் சொன்னதைக் கேட்ட தவ்பீக்குக்கு சிறிது நம்பிக்கை துளிர்விட்டது. அதற்கு காரணம் இருந்தது. ஷப்பீர் நகரத்தில்

செல்வாக்கு மிக்கவர் என்பது ஒரு புறம் இருக்க,அவர்மொஹல்லாபள்ளிவாசலின் ஜமாத் தலைவராகவும் இருந்தார். நசீரும், தவ்பீக்கும் ஜமாத் உறுப்பினர்கள். அந்த விதத்தில் அவருடன் நெருங்கி இருந்தனர். அந்த ஒரு காரணம்தான் தவ்பீக்கின் மனதில் ஒரு நம்பிக்கை விதையை முளைக்கச் செய்தது.

அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

அவனுடைய மௌனத்தைக் கண்ட நசீர், "என்னண்ணே பேசாம இருக்கீங்க?" என உசுப்பினான்.

"இல்லை, நமக்கு எப்படியும் ஒரு லட்ச ரூபாயாவது தேவைப்படும். அவ்வளவுப் பணத்தை அவர் தருவாரா?" – தன் சந்தேகத்தை வெளிப்படுத்தினான் தவ்பீக்.

"நமக்கு அவர் நல்ல பரிச்சயம். கண்டிப்பா கொடுப்பாருங்கற நம்பிக்கை எனக்கிருக்கு. கேட்டுத்தான் பார்ப்போமே." என்றான் நசீர்.

இஷா தொழுகைக்குப் பின் ஷப்பீர் பாயைச் சந்தித்தனர் இருவரும்.

தன் வெள்ளைப் பஞ்சு தாடியை கோதியவாறு, "வியாபாரத்துக்காகக் கேக்க றீங்க. நல்லது. ஆளுக்கு அம்பதாயிரம் ரூபா கடனாத் தாறேன். ஆனா, அதை எப்பத் திருப்பித் தருவீங்க?" என்று கேட்டார் ஷப்பீர் பாய்.

"மூணு மாசத்துல திருப்பிடுவோம் பாய்." – ஏற்கனவே பேசிவைத்தது போல்

"சரி, அப்ப நாளைக்கு வந்து செக் வாங்கிட்டுப் போங்க."

அவர் சொன்னதைக் கேட்ட இருவரும் மலர்ந்தனர்.

"ரொம்ப நன்றி பாய்." என்று எழுந்து விடை பெற்றனர்.

வழியில், "அண்ணே, கேக்கவே பயந்துட்டிருந்தீங்களே, பாருங்க பாய் கடன் தர சம்மதிச்சுட்டார்." என்று குதித்தான் நசீர்.

"ஆமாம் நசீர். நான் இதை எதிர் பார்க்கலை." என்றான் தவ்பீக்.

"பேங்க்ல வாங்கினா ஷூரிட்டி, லொட்டு, லொசுக்குன்னு ஏகப்பட்ட விஷயங்களை கவனிக்கணும். அது மட்டுமா? வட்டி வேறு எக்கச்சக்கமா கறப்பானுங்க. வட்டியே இல்லாம நமக்கு பணம் கிடைக்குது. இதை வெச்சே நாம முன்னேறிடலாம்." என்று நசீர் சொன்னானே தவிர, அவன் மூளை வேறு விதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

மூன்று மாதங்கள் ஓடின.

சொன்னதுபோல் சரியாகப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தான் தவ்பீக்.

ஆனால், வாங்கியப் பணத்தைத் திருப்பித் தராமல் டிமிக்கி கொடுக்க ஆரம்பித்தான் நசீர்.

'அடுத்த வாரம் தருகிறேன், அடுத்த மாதம் தருகிறேன்.' என மழுப்பி வந்தான்.

அப்படி, இப்படி என மேலும் மூன்று மாதங்கள் உருண்டோடின.

அன்று ஜும்மா தொழுகைக்குப் பின் ஷப்பீர் பாயைச் சந்தித்து அவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பித் தந்தான் நசீர்.

"தாமதமாய்த் தந்ததுக்கு மன்னிக்கணும் பாய்." என்றான்.

"கொடுத்த வாக்கைக் காப்பாத்தணும். அதுதான்மனிததர்மம்.மனுசனுக்குசிலசமயம் இக்கட்டான நிலைமை வருவதுண்டு. அப்படி உங்களுக்கும் வந்திருக்கலாம். அதனால் என்ன, பரவாயில்லை, தாமதமானாலும்

திருப்பிக் கொடுத்திட்டீங்கள்ல? சந்தோசம்." என்றார் ஷப்பீர் பாய்.

நசீர் எதற்கோ தயங்குவது தெரிந்தது.

"என்ன விசயம்?" என்று கேட்டார் ஷப்பீர் பாய்.

"பாய், நான் ஒண்ணு சொல்றேன். அதை நீங்க தப்பா எடுத்துக்கப்படாது."

"சும்மா சொல்லுங்க."

"திருப்பித்தரப் போவதில்லைங்கற தீர்மானத்தோடுதான் உங்க கிட்ட கடன் வாங்கினேன்."

திடுக்கிட்டார் ஷப்பீர் பாய்.

"என்ன சொல்றீங்க?"

"உண்மையாத்தான் சொல்றேன். இறைவன் உங்களுக்கு ஏகப்பட்ட சொத்தை வாரி வழங்கி இருக்கிறான். அதிலிருந்து ஒரு அம்பது ஆயிரம் ரூபா கொறைஞ்சா என்னனங்கிற எண்ணத்தில்தான் உங்க கிட்ட கடன் வாங்கினேன். ஆனா, தவ்பீக் பாய் நேர்மையா நடந்துக்கிட்டாரு. சொன்ன நேரத்தில் கண்ணியமா கொண்டு வந்து பணத்தை திருப்பிக் கொடுத்திட்டாரு."

"திருப்பித்தரக்கூடாதுங்கிற எண்ணத்துல நீங்க கடன் வாங்கியிருக் கீங்க. இப்ப எப்படி திடீர்னு மனசு மாறிட்டீங்க?"

"நாம மனுஷங்களை ஏமாத்தலாம். ஆனா, அந்த ஏக இறைவனை ஏமாத்த முடியுமா?"

சொன்ன நசீரை குழப்பமாய் ஏறிட்டார் ஷப்பீர் பாய்.

நசீர் தொடர்ந்தான்:

"உங்ககிட்ட கடனா வாங்கிய பணத்தைக் கொண்டு நானும், தவ்பீக் பாயும் அதே சாமான் களைத்தான் வாங்கிப் போட்டோம். என்ன ஆச்சரியம், அவர் கடையில் செம கிராக்கி. எனக்கோ ஏகப்பட்ட நஷ்டம். உங்ககிட்ட வாங்கிய கடனை எப்படித் திருப்பித் தருவதுங்கிறதே தவ்பீக்குடைய கவலையா இருந்துச்சு. ஆனா, நான் அதை ஏப்பம் விடப் பார்த்தேன். அதனால்தான் அவருக்கு வியாபாரத்தில் லாபமும், எனக்கு நஷ்டமும் ஏற்பட்டுடுச்சு. இந்த உண்மையைப் புரிஞ்சுக்கிட்ட நான் என் சொந்த நிலத்தை அடகு வெச்சு உங்க பணத்தைத் திருப்பிக் கொடுத்தேன்."

*"எவன் மக்களின் பணத்தை (அல்லது பொருட்களைத்) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி அதை (ஏமாற்றி) அழித்து விடும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அல்லாஹ்வும் அவனை அழித்துவிடுவான்." என அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.*

இந்த நபிமொழியைப் புரிந்துக் கொண்ட உங்களுக்கு அல்லாஹ் நிச்சயம் அருள் புரிவான். இன்ஷா அல்லாஹ், உங்களுடைய வியாபரமும் நன்றாக நடக்கும். கவலைப் படாதீங்க." என ஆறுதலளித்தார் ஷப்பீர் பாய்.

அவரை ஏறெடுத்துப் பார்க்கும் சக்கியற்றவனாக தலையைத் தாழ்த்தியவாறு அங்கிருந்து விடைப் பெற்றான் நசீர். ■

**நீ தூவும்**
**பூக்களில்**
**உன் வாசம்**
**நான் போகும்**
**பாதையில்**
**உன் நேசம்**

# மாமனை மயக்கிய மல்லிகை



**- தர்மா**

[ முத்தைத்தரு பத்தித் திருநகை ]
[ அருணகிரியாரின் திருப்புகழ் சந்தம் ]

பட்டுத்துணி கட்டிச் சொருகிய
அத்தைக்கொரு சுட்டித் திருமகள்.. !
பச்சைக்கொடி நட்டுக் கலையென - வருவாளே

பற்றிக்கொள வெத்திக் கடகட
அற்பச்சிரி கொட்டித் தருகிற
பச்சைக்கன வெத்திப் படபட - வெனவானேன்

மொட்டைப்பயல் மொட்டைப் பயலென
விட்டுச்சிரி கொட்டித் திரிபவர்
முற்றத்தினில் நிற்கத் தகுதிக -  ளடையாரே

மொத்தப்பகை கட்குச் சிறுமதி
முட்டுப்படும் மொத்தப் பகைகளும்
மொச்சைப்பயிர் கட்டிப் புதுவகை - எனலாமோ

கொட்டித்தர வெத்தத் தடையிலை
மச்சத்தினி லுச்சப் படுமொரு
குட்டிச்சடை கட்டித் திரிகிற -  எனையாளே

கொச்சைச்சொலி லற்பப் பதரென
ஒட்டிக்கவி கட்டத் துணிவிலை..
குட்டிச்சுவர் குட்டிச் சுவரென - நினையாதே

எட்டத்துணி வற்றுத் திரிகிற
அற்பத்தன மற்றுத் தொலையினி
எட்டிப்புக ழெத்தும் விரைவினி -  லிணைவோமே

இச்சைப்பணி கட்குத் தடையடி
பச்சைத்தமிழ் மெச்சப் படிபடி
எட்டப்பனு மொட்டப் பனுமினி -  வருவானோ...

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன - தனதானா

# தமிழக உணவும் அண்டைய மாநிலங்களின் உணவும்



**நிறைமதி நீலமேகம்**

- ஒவ்வொரு சமூகத்தின் பாரம்பரியம் அதிகம் அறியப்படுவது உணவின் மூலம் தான்.

- ஒவ்வொரு நாட்டிற்கும் மண்ணுக்கும் அதன் பாரம்பரிய உணவே அழகு சேர்க்கும்.

- அதனைக் காப்பது நமது தலைசிறந்தக் கடமையாகும்.

- பழக்கத்தின் அடிப்படையிலேயே உணவு பழக்கம் தொடர்கின்றது....நமது பாரம்பரிய உணவுக்கு இணை ஏதும் உண்டோ......எத்தனை நவீன மாற்றங்கள் வந்தாலும் இன்று அனைவரும் நாடிச் செல்வது நமது பாரம்பரிய உணவைத் தேடியே..

- பாரம்பரிய உணவு என்பது விதைகளில் இருந்து விளைந்தது என்பதை மறுக்க முடியுமா அல்லது மறக்கத்தான் முடியுமா..?

- இன்று ஒட்டுரக விதைகள் வந்து உயிரை எடுக்கின்றதே.

- தமிழர்களின் பாரம்பரிய உணவே தலை சிறந்தது.

- ஆரோக்கியம் காக்கும் ஊட்டச்சத்து மற்றும் நோய் தடுக்கும் உணவுகளும் மறைந்து மறந்து போனதால் தான் மருத்துவமனையில் இன்று தஞ்சம் அடைகின்றனர்

- ஒவ்வொரு மாநிலங்களின் தட்பவெப்ப

சூழ்நிலைகேற்பவே உணவு பழக்கம் வளர்ந்து வந்துள்ளதால்... அவரவர் உணமுறையே அங்கங்கு உயர்ந்ததாக கருதப்படுகிறது.

- அரிசியும் கோதுமையும் இவற்றின் நார்ச்சத்துக்கு அருகில் கூட நிற்க முடியாது.

- வெயிலில் அதிகம் அலைகிறவர்கள், கடின வேலை செய்பவர்கள் அதிகம் சோர்வடைகின்றனர்.. இவர்களுக்கு தேவாமிர்தமாக அமைவது கம்மங்கூழ்.

- புத்துணர்வு பெற கம்பை கூழாக்கி, அதனுடன் மோர் கலந்து மதிய வேளையில் அருந்தி வந்தால் உடல் சோர்வு நீங்கி புத்துணர்வு பெறுவர். இன்றும் சில இடங்களில் கூழ் செய்து விற்பனை செய்வதை காண்கிறோம்.

- வெப்பப் பகுதியில் வாழ்பவர்களுக்கு கோடை காலத்தில் கம்பு, கேழ்வரகு உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது.

- அக்காலத்தில் மக்கள் பெரும்பாலும் காலை வேளையில் கேழ்வரகை கூழ் செய்து காலை உணவாக உட்கொண்டு வந்தார்கள். அதனால் தான் அவர்கள் நீண்ட நாட்கள் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

- ஆரோக்கியமானது தமிழ்நாட்டு காலை உணவுகள்

- கம்பு, கேழ்வரகு மட்டுமின்றி, மக்கா சோளம், கோதுமை போன்றவற்றை தங்களின் உணவுகளில் அதிகம் சேர்த்து வந்ததால் ஆரோக்கியம் நிறைந்திருந்தது.

- ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள உணவு பழக்கங்கள் அவரவர்க்கு உயர்ந்தது என்றாலும் இக்கரைக்கு அக்கரைப் பச்சை.... நமது பாராம்பரிய உணவே நமக்கு உயர்வானது. ■

## வா.சண்முகம் தன்முனை

நீஅழுத கண்ணீர்தான்
கடலாய் ஆனதோ
சீதை அழுததென
ராமகாதை சொல்கிறதே.

உனது வினாக்களில்தான்
வியப்புகளும் வருகிறது
புரிதலில் தடுமாற்றம்
புன்னகை பரிபோனது.

ஆயிரம் அம்புகளை
இதயத்தில் செழுத்தினாய்
அன்பான பார்வையால்
என்னை மீட்டெடு.

இழப்பதற்கு இனியும்
என்ன இருக்கிறது
இதயத்தை முன்பே
நீதிருடி விட்டாயே.

## ஹைக்கூ

நீரற்ற ஓடை
நத்தையின் நகர்வில்
ஒரு கப்பலின் பயணம்

இறந்தும்
பாலூட்டும் அன்னை
உறக்கத்தில் உதட்டசைவு

எவருமே இல்லையென
அழுதவனின் கண்ணீரைத் துடைத்தது
அவனது உள்ளங்கை

தூரல் விழ
இதழ் விரித்தன
குடைப் பூக்கள்

பேரம்பேசி வாங்கினேன்
கோபத்தில்
காலைக் கடித்தது செருப்பு

கடவுளை வணங்குகிறேன்
இதயத்தை வணங்குகிறது
இணையும் கைகள்

**சா.கா.பாரதி ராஜா**
செங்கல்பட்டு




## நூல் விமர்சனம்

ï s Qú. \ Þ · áV.. ¼ïV¸.

### கவிஞர் செல்வம் ரகுவின்

# இனி எல்லாம் சுகமே

ஹைக்கூ, ரென்கா வகை கவிதைகள்...

raguraman66@gmail.com

ஹைக்கூ என்பது ஜப்பானிய கவிதை வடிவம். இதை தோற்றுவித்தவர் பாஷோ என்ற ஜப்பானிய கவிஞர் என்பது நம் அனைவரும் அறிந்ததே. இந்த வடிவத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவர்களில் குறிப்பிட தகுந்தவர்களில் எஸ்ரா பௌண்டும் ஒருவராவார்.

தமிழில்புதுக்கவிதைக்குகிடைத்தசெல்வாக்கு ஹைக்கூ கவிதைக்கும் கிடைத்திருக்கிறது. உலக கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது ஹைக்கூதான் என்று கூறுகிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

சின்ன சின்ன சொற் செட்டுகளுடன் மின்னலை போல் தாக்க கூடிய வசீகரம் ஹைக்கூவிற்கு மட்டுமே உண்டு. ஜப்பான் மொழியில் புதிர் போட்டு விடை காணும் விடுகதைக்கு “ரெங்கா” என்ற பெயர் உள்ளது. ஜப்பானில் “ரென்கா” என்று சொல்ல வேண்டும்.

தமிழ் இலக்கியம் காலம் தோறும் பல்வேறு வகையான பாடு பொருளுக்கும் புதிய இலக்கிய வடிவங்களுக்கும் இடம் கொடுத்து தன்னை வளப்படுத்தி கொண்டுள்ளது.

திருப்பூர் கவிஞர் செல்லம் ரகு அவர்கள் தேனி முற்போக்கு கலை இலக்கிய மேடையில் எனக்கு அறிமுகம் ஆனவர்.

ஒரு மருத்துவர் இலக்கியவாதியாய், கவிஞராய் இருப்பதே அபூர்வம். இதுவே என்னை முதலில் வியப்பிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தி விட்டது. கவிஞரின் அன்பான, ஆற்றொழுக்கான பேச்சு நடை அவரை ஒரு நற் சிந்தனையாளராக அடையாளப் படுத்துகிறது.

அவர் கவிதைக்காரர் என்பதற்கான சாட்சியங்களாக இருப்பது அவரது இனிமையான பேச்சும், இதயம் கலந்து பேசும் அன்பும், பண்புமே என்றால் அது உண்மையே.

இனி எல்லாம் சுகமே என்ற தொகுப்பை 2020 - புத்தாண்டின் தொடக்கத்திலேயே வெளியிட்டு, அதன் மூலம் இப்புத்தாண்டு இனி எல்லாம் சுகமாகத் தொடங்கட்டும் எனச் சமூகத்திற்கு ஒரு செய்தி சொல்லும் விதமாக இந்த ஹைக்கூ தொகுப்பை நமக்கு வழங்கி இருக்கிறார்.

“உயரப் பறக்கும் பருந்து
வானமே எல்லை என்கிறது
முயற்சியின் இலக்கு”

என்ற வரிகளில் மின்னுகிறது கவிஞரின் வாழ்வும் வாக்கும் !

“வானில் வெடித்து சிதறியது
ஆபத்து இல்லை எனினும் அழுதனர்
பலூனுக்காக குழந்தைகள்”

முதல் வரியில் ஏதோ ஒரு விபத்து என்று நம்மை எண்ண வைக்கிறார். இரண்டாம் வரியில் ஆபத்து இல்லை என்று சொல்லி நம்மை ஆறுதல் கொள்ள வைக்கிறார். எனினும் அழுதனர் என்று ஒரு கொக்கியை போட்டு மூன்றாம் வரியில் இணைகிறார். மூன்றாம் வரியில் ‘பலூனுக்காக அழும் குழந்தைகளை’ நமக்கு அறிமுகம் செய்கிறார். இதன் மூலம் ஹைக்கூவின் வசீகரமான வடிவத்தையும் அதன் உள்ளார்ந்த கருத்து கோர்வையையும் நமக்கு புலப்படும்படி செய்கிறார்.

“மதம் பிடித்தவர்களின் குணம்
மிகப் பெரிய ஆட்டம் கண்டது
வெளிவந்த கீழடி நாகரீகம்”

என்று தற்போது அகழாய்வு பணியை ஆழ்ந்து நோக்கி அது மதம் பிடித்த அரசியலை எப்படி எல்லாம் வீழ்த்துகிறது என்பதை படம் பிடித்து காட்டுகிறார்.

தொகுப்பு முழுவதும் சமூக அவலங் களை சாடுவதும், இயற்கை மீதான நேசமும், நாட்டு நடப்புகளை துல்லியமாக அறிந்து அதன் மீதான பதிவுகளை கவிதை என்ற பெயரில் சொற்களால் பெருக்காமல் சொற்களை சுருக்கி மொழிக்கு வலிமை அளிக்கும் நேர்த்தியான நடை ஒழுங்குடன் பல பாடு பொருள்களை கொண்ட தொகுப்பாக இது உள்ளது.

சகோதரர் கவிஞர் செல்லம் ரகு-வின் கவிப்பயணம் மென்மேலும் வெற்றி பெற வாழ்த்துக்கள்.



# எண்ண ஓட்டம் காட்டும் கன்னம் தாங்கும் கரம்

கவிஞர் வெற்றிவேந்தன்



முப்பொட்டு முகமிட்டு ஒப்பிலா அழகூட்ட
முனைந்தனளோ ஈன்றவள்தான்

அப்பொட்டு எதற்கென்று வியந்து நீ
இட்டாயோ கரமொன்றை கன்னத்தில்

அப்பாடா என ஓய்ந்து
முட்டுக் கொடுத்தாயோ முகத்துக்கு

அப்பம்மா அருகமர்ந்து அஞ்சனமிட்டு
கண்ணேறு கழித்தாளோ

முப்பொட்டின் மந்தணம்
இன்னதென்றறியா இளமொட்டே

அப்பத்தா வயதெட்டி
நவபத்தாம் அகவையிலே

கன்னத்தை கரம் தாங்கும்
தொலைந்ததெங்கே அழகெல்லாம் என வியந்து

நரை கூடும் தலைக் கேசம் பஞ்சொக்கும்

புரை விழுந்த விழியதனில் திரையாடும்
கரைந்தோடிய வனப்பெல்லாம் கவலையுறச் செய்யும்

சிறு மொட்டு பருவத்தில்
கரும் பொட்டு வியந்து கன்னத்திலிட்ட கரம்

பெரு வயதில் தொலைத்திட்ட
அழகினை நினைத்தேங்கி
கரமிட வைக்கும் கன்னத்தில்

பருவங்கள் இரண்டினிலும்
காரணி வேறெனினும்
செயலொன்றே

கன்னத்தை கரம் தாங்கல்
எண்ணத்தை படமோட்ட
விண்ணவரின் ஏற்பாடு

தலை நிற்கா பருவம் முதல்
தலையாடும் பருவம் வரை

கன்னம் தாங்கும் கரமொன்றே
வண்ணக் கோலம் வாடி வற்றி மாறிடினும்

# பிரச்சினைகளுக்குத் தீர்வ - தற்கொலை அல்ல!

## கவிஞர் தியாரூ

**தமிழக அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்றவர்**



பயந்து ஓடுகின்றவனைப் பார்க்கும் தெருநாய்களுக்கு, ஒருகோழைசிக்கிவிட்டான் என்ற எண்ணம் வந்துவிடுகிறது. அவன் தலைதெறிக்க ஓடும் போது அவைகளும் அவனைத் துரத்திக் கொண்டே ஓடுகின்றன.

தெருவில் எத்தனை நாய்கள் இருந்தாலும் அவற்றைக் கண்டு கொள்ளாமல் நடக் கின்றவனை அவை மரியாதையுடன் பார்க்கும். வாலாட்டிக் கொண்டு குழையும். அவனை மிரட்டும் துணிச்சல் அவற்றிற்கு வருவதில்லை.

நம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச் சினைகளும் அப்படிதான். அவற்றைக் கண்டு பயந்து நடுங்கி நாம் ஓடத் தொடங்கிவிட்டால், அவை நம்மை துரத்தித் துரத்திக் கலங்கடிக்கும். நம் தோளின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு கழுத்தை நெரிக்கும். ஆனால், பிரச்சினைகளின் மீது ஏறி நடக்கத் துணிந்துவிட்டால் அவை நமக்குப் பணிந்துவிடும்.

சிக்கல் ஏற்படும்போது பதற்றம் அடைந்துவிடக் கூடாது. ஏனெனில், மனதில் ஏற்படுகின்ற பதற்றம் ஒரு சிக்கலை பல்வேறு சிக்கல்களாக மாற்றிவிடும். எனவே நிதானமாகச் செயல்படுவதற்கு மனோதிடமும் மனத்தெளிவும் அவசியமா கின்றன.

காந்தத் தன்மை மிக்க ஒரு பொருளை தொடர்ந்து சூடேற்றினால், அல்லது சம்மட்டியால் அடித்தால் அதில் உள்ள அணுக்களின் அமைப்பு மாறிவிடும். அப்போது அவற்றின் காந்தப்புலம் கலைந்து விடும். இதையடுத்து அந்தப் பொருளின் காந்தத் தன்மை குறையும். நிரந்தர காந்த சக்தி கொண்ட பொருளாக இருந்தாலும், அதனைத் தவறாகக் கையாண்டால், அது தன் காந்தத் தன்மையை இழந்துவிடுகிறதே.

அதைப்போலத்தானே மனித மனமும். அது ஆற்றல் மிக்கது. அற்புதமானது. அதில் கோழைத்தனமான எண்ணங்களையே

நிரப்பிக்கொண்டிருந்தால்அதுதன்ஆற்றலை முற்றிலுமாக இழந்து தொய்ந்துவிடும். அது மிக ஆபத்தானது. அதனால்தான், உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா என்று பாரதி பாடினான்.

சிலருக்கு வாழ்வில் சிறிய சறுக்கல் ஏற்பட்டுவிட்டால் போதும், வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று புலம்பத் தொடங்கி விடுவார்கள். தெரிந்தவர்களுக் கெல்லாம் போன் போட்டு ஓலமிடுவார்கள். அப்படிப் பேசிப் பேசியே ஆறடி வீழ்ச்சியிலிருந்து அறுபதடிக்கு இறங்கி விடுவார்கள். ஆனால் எதையும் இயல்பாக ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

உலகில் பெரும் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கியவன் மாவீரன் நெப்போலியன். இறுதியில் போரில் தோல்வி அடைந்து ஹெலினாதீவில்சிறைவைக்கப்பட்டிருந்தான். அங்கு நெப்போலியனை கண்காணிக்க ஒரு மருத்துவரை சிறை நிர்வாகம் நியமித்திருந்தது.

மருத்துவரும் நெப்போலியனும் ஒருநாள், ஒரு சிறிய வரப்பில் நடந்தபோது எதிரே ஒரு பெண்மணி நடந்து வந்தாள். மருத்துவர் அந்த பெண்ணிடம், 'அம்மா, இவர்தான் மாவீரன் நெப்போலியன். நீங்கள் அவருக்கு வழிவிட்டு வரப்பிலிருந்து இறங்கி நிற்க வேண்டும்' என்றார். அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நெப்போலியன் பாதையை விட்டு இறங்கி



அந்த பெண்ணிற்கு வழிவிட அவள் கடந்து சென்றாள்.

தன்னை கேள்விக்குறியுடன் பார்த்த மருத்துவரிடம், 'மற்றவர்கள் விலகி வழிவிடுவதற்கு, இப்போது நான் சக்கரவர்த்jp நெப்போலியன் அல்ல. இன்றைய நெப்போலியன் மற்றவர்களுக்கு வழிவிட வேண்டியவன்தான்' என்று சொல்லிவிட்டு வரப்பில் ஏறி நடந்தான்.

வாழ்வை புரிந்து கொள்வதே வாழ்வின் பெருமை. அதில்தான் சிலருக்குப் பிரச்சினை. எதையும் விளங்கிக் கொள்வதே இல்லை. வாழ்க்கை என்பது ஒரு நேர்கோடு அல்ல; அதன் சுவாரஸ்யமே, அது பல வளைவு நெளிவுகளையும் திருப்பங்களையும் கொண் டிருப்பதுதான் என்பதை அவர் உணர்வதில்லை.

சில தருணங்களில் எதிர்பாராத திருப்பங்கள் அல்லது பிரச்சினைகள் ஏற்பட்டுவிடுவதுண்டு. அச்சூழ்நிலை களில் நம்பிக்கை என்னும் நங்கூரத்தில் மனதை நிலைநிறுத்தத்தவறிவிடுகின்றபோதுதான், விபரீதமான எண்ணங்கள் மனதில் தலைதூக்கிவிடுகின்றன.

தொழிலில் நஷ்டம், கடன் தொல்லை, கணவன் மனைவி கருத்து வேறுபாடு, காதலில் பிளவு, தேர்வில் தோல்வி, வேலை இழப்பு போன்றவற்றால் மன அழுத்தம் ஏற்படுகின்றது. அச்சூழ்நிலையில், அதனை மேற்கொள்ள மனதில் துணிச்சல் இல்லாதவர்கள் எடுக்கின்ற கோழைத்தனமான முடிவுதான் தற்கொலை.

ஆத்திரம் கண்ணை மறைக்கும். அதுபோல, கோழைத்தனமும் மனக் கண்ணை மறைக்கின்ற தீய சக்திதான். வாழ்க்கையைப் பற்றிய புரிதலை அது தடுத்துவிடுகின்றது.

தற்கொலை ஒரு கணநேரத் தீர்மானம். மூளையில் என்டார்ஃபின்களின் வெள்ளப் பெருக்கினால் 'உன்னை உடனே அழித்துக்கொள்' என்று கட்டளை வரும். பகுத்தறிவு, வலி, பின்விளைவு போன்ற மற்ற விஷயங்களை இந்தக் கட்டளை பின்னுக்குத் தள்ளிவிடும்.

ஆனால் அந்த ஒரு கணநேரத்தைக் கடந்துவிட்டால் வாழ்க்கை தப்பித்து விடும். தற்கொலை செய்வதற்குத் தீர்மானித்து கடைசி நொடியில், அந்த எண்ணத்திலிருந்து விடுபட்டு வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் பலர் உண்டு.

சிறியவரோ பெரியவரோ, யாராக இருந்தாலும் சரி, பிரச்சினைகளுக்குத் தீர்வு தற்கொலை அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும். வாழ்க்கை நமக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பு. அதை நன்கு பயன்படுத்திக் கொள்வதும் வாழ்வாங்கு வாழ்ந்திருப்பதும் நம் கையில்தான் இருக்கின்றது.

பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் போது பதற்றம் அடையாதீர்கள். கொஞ்சம் நிதானமாக யோசியுங்கள். வழிகள் திறக்கும்.

இன்றிருப்பதுபோல் நாளைய தினம் இருப்பதில்லை. இன்று உங்களை அச்சுறுத்திக் கலங்கப்பண்ணும் சூழ்நிலைகள் நாளை மாயமாகி மறைந்துவிடக்கூடம். நிலை மாறும் என்னும் நம்பிக்கையே முக்கியம்.

கடன் பாரம் என்றால் அதனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைப்பதற்குத் திட்டமிடுங்கள். சுலபமாக முடித்து விடலாம். தேர்வில் தோல்வி வந்தால் என்ன, அடுத்த முறை தேர்ச்சி பெற்றுவிடலாம். உறவுகளுக்குள் பிரச்சினை என்றால் மனம் விட்டுப் பேசுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

வற்றிய குளங்கள் வாழ்விழந்துவிடவில்லை. தற்காலிக வறட்சி, அவ்வளவுதான். மீண்டும் மழைவரும். மீண்டும் குளம் நிரம்பும். மீன்கள் துள்ளி விளையாடும். கரையோர மரங்கள் தழைத்தோங்கும். பறவைகள் வந்து கூடு கட்டும்.



# கருத்துத் துளிகள்

முடியா தென்பவர்
முயன்றவர் இல்லை
விடிவு கண்டவர்
விலக்கினர் தொல்லை

முறைகளை மீறி
முயல்பவன் முரடன்
கறைநிறை அவன்பின்
செல்பவன் குருடன்

முயற்சி செய்தால்
முதன்மை கிடைக்கும்
அயற்சி வந்தால்
மேன்மை உடைக்கும்

முழுதும் கற்றவர்
உலகில் இல்லை
பழுதில் லாதவர்
பாரில் இல்லை

முயற்சி முயற்சி
முயற்சி தேவை
அயற்சி இலாத
முயற்சி தேவை

முடியும் என்றே
முயல்பவர் வெல்வர்
விடிவை நோக்கி
விரைவில் செல்வர்

**கவிமாமணி சேலம்பாலன்**

மாற்றங்கள் அற்புதமானவை. நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டவை. உங்கள் வாழ்வில் ஏதோ ஒரு தேக்கநிலை ஏற்படலாம். அல்லது வீழ்ச்சி ஏற்பட்டது போல் தோன்றலாம். தீர்க்க முடியாத சிக்கலுக்குள் சிக்கிக் கொண்டதுபோல் கலக்கம் உண்டாகலாம். ஆனால் அவை அனைத்தும் கலைந்து போகும் மேகங்கள்தான் என்பதை நம்புங்கள்.

நம்மைவிட பிரச்சினைகள் ஒன்றும் பெரியவை அல்ல. நம் ஆற்றலைவிட சூழ்நிலைகள் ஒன்றும் வலுமிக்கவை அல்ல. எனவே திடன் கொள்ளுங்கள். சின்னச் சின்ன விஷயங்களுக்காக சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால், கைசேர வேண்டிய பெரிய பெரிய நன்மைகள் கைநழுவிப்போய்விடும்.துணிந்துவிட்டால், மலைபோன்ற பிரச்சினைகளும் நம் கால்களுக்குக் கீழே வந்துவிடும்.

ஒரு சிறு மெழுகுவர்த்தியின் வெளிச்சம் ஒருவீட்டின் இருளை அகற்றி விடுகின்றதே. அப்படியெனில், உங்களுக்குள் துளிர்விடும் ஒரு சிறு நம்பிக்கையின் கீற்று உங்களைத் தூக்கி நிறுத்திவிடாதா!

‘என்னடா வாழ்க்கை இது?’ என்று ஏன் சலிப்படைய வேண்டும்? ‘இந்த வாழ்க்கைக்கு என்ன குறை’ என்று எண்ணி மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கிவிட்டால், பிரச்சினைகள் நமக்கு ஒரு பிரச்சினையே அல்ல. வாழ்வை ரசிக்கும் போதுதான் வாழ்வின் மகத்துவங்கள் நமக்குப் புலப்படும்.

எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையாக இருந்தாலும், தற்கொலை அதற்கு நியாயமானத் தீர்வாகாது. உள்ளுக்குள் பலப்படுவதும், உறுதியுடன் சவால்களைச் சந்திப்பதுமே பிரச்சினைகளுக்கான தீர்வு.

வாழ்வை நேசிப்போம். ஏனெனில் வாழ்க்கை என்பது காலத்தின் பெருங் கொடை. அதனை நமக்கும் மற்றவர் களுக்கும் பயனுள்ளதாக்குவோம். வாழ் வாங்கு வாழ்ந்திருப்போம். ■

கவிஞர்

# வலம்புரி லேனா



066

ஆசிரியர் :
ஆலம்பொழில் - கடித இலக்கிய இதழ்,
மதுமலர் - படைப்பிலக்கிய இதழ்,
2 / 52, மெயின் ரோடு,
திருவாலம்பொழில் - 613103,
( திருப்பூந்துருத்தி வழி)
தஞ்சாவூர் மாவட்டம்.

அலைபேசி : 9894138439

066-01 ஆடி ஆடி பறந்தது 1301
உச்சம் தொட்ட பறவையின்
உதிர்ந்த சிறகு.

066-02 நிறைய போதித்தது 1302
நிறைவாய் போதித்தது
நிர்வாணம்

066-03 அரங்கு நிறைந்த காட்சிகளாக 1303
நடந்து கொண்டிருந்தன
திருமணங்கள்

066-04 உரிமை பேசப்பட்டது 1304
ஆடை தடுமாறியது
தறிகெட்டது கலாச்சாரம்

066-05 கூட்டி அள்ளி குவித்து 1305
பற்ற வைத்தனர்
கூவி எரிந்தன.. சருகுகள்

066-06 வனம் 1306
மெருகூட்டப்பட்டது
பனியின் ஒப்பனை

066-07 உதிர்ந்தாலும் 1307
மண(ன)ம் வீசியது
காதல்

066-08 வெற்றிடங்களை நிரப்பிக்கொண்டு 1308
புறப்பட்டது
குடம் விற்கும் வாகனம்

066-09 குடிசைகள் தீக்கிரையாயின 1309
பற்றி எரிய ஆரம்பித்தது
வறுமை.

066-10 பிணவாடை 1310
சுட்ட கோழி
விற்கும் கடை

**236** 俳句 haiku

066-11 எரியூட்டியும் 1311
தணியவில்லை
ஜாதி வெறி

066-12 நீர் சுமந்த மேகம் 1312
வேகமாய் ஓடியது
காற்றின் திசைகளில் ஆகாயம்.

066-13 வாசிக்காத பக்கங்களில் 1313
படபடத்தன
அவளுக்கான கவிதை

066-14 தேடி அலைந்த காக்கைகள் 1314
கொத்தி தின்றன
ரேஷன்கடை வாசலில் அரிசி

066-15 நிழலுக்கு ஒதுங்கிய 1315
மரத்தின் கீழ்
கைகளில் விழுகிறது இலை

066-16 விழா முடியும் வரை 1316
கூட்டத்தின் நடுவே காத்திருக்கிறது
ஒற்றை இருக்கை

066-17 தோட்டத்தில் சஞ்சரித்து 1317
திரும்பும்போது
பூக்களின் வாசம்

066-18 தீப ஒளியில் தரிசனம் 1318
கண்மூடி வேண்டுதல்
பக்தன்

066-19 மணியோசை ஒலியில் 1319
அமைதி படரும் மனம்
ஆலயவாசல்

066-20 ஊர் சுற்றக்கிளம்பினார் 1320
சாலையில் வாகன நெரிசல்
உற்சவர்.

# பெண்ணே!
## விண்ணை முட்டும் வீரிய விதையாய் ...



பெண்ணே....பொறுமையின் பெருமையாய் பூமிக்கு உரமாய்
கற்பின் இருப்பிடமாய் கடவுளின் அவதாரமாய்
கருவுக்கு உயிராய் கருணைக்கு உருவாய்
மண்ணும் மதியுமாய் கல்லும் கனியுமாய்
மாண்புறும் இயற்கையாய்
மதிப்புறும் மா தவப் பெண்ணே

ஈன்று புறம் தருவதாயினும் தாய்மையின் தூய்மை
தன்னலமறியா தனிப்பெரும் மேன்மை
விட்டுக்கொடுத்தல் மட்டுமே பெண்மை குணமன்று
வீரியம் பேசிடலும் இருந்திடலாம் தவறன்று
ஈடில்லா பரம்பொருளாய் இப்புவியில்
வந்துதித்த புதுமைப் பெண் பிறப்பே

வீரத்தில் மட்டுமன்று விவேகத்திலும்
ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப்பில்லை
தீயாய் பொங்கி எழு தீமை கொழுத்திவிடு
புயலையும் உள்ளங்கையிலே புகுத்தி அடக்கி விடு
தூண்டில் புழுவாய் துவண்டு விடாதே
விண்ணை முட்டிடும் வீரிய விதையாய் இரு

மனமென்னும் சிறகு விரித்துப்
புறப்படு புது லட்சியத்தோடு

வெட்கமும் நாணமும் வேண்டியபோது மட்டும் இருக்கட்டுமே

இல்லறம் போற்றி நல்லறம் பேணி
தலை நிமிர்த்தி விழி விரித்து
விண்ணை நோக்கிடு வீரியத்துடன் முட்டிடலாம்...
வினைகள் சீறிவரும் விசித்திர உலகிலே
வெளிச்சம் என்றும் உனக்காக மட்டுமே ....

**கவிதா ராஜசேகர்**
ஈரோடு

# புல்லாகிப் புழுவாகி நின்றாய்...

யாதுமாகி நின்றாய் பெண்ணே
யாவையும் நீ படைப்பாய்
தீதுநன்மை அறிவாய் பெண்ணே
செம்மை வழிகள் செய்வாய்.

விதைக்குள் உறங்கும் பெருமரம் நீயே
பெருமரம் தழுவும் தென்றலும் நீயே
மலைகளை மணலாய்ப் பொடிபடச் செய்யும்
மழைச்சூறாவளியும் நீதான் பெண்ணே

கடலுள் உறங்கும் கனலும் நீயே
கானலில் நீராய்க் கனிவாய் நீயே

ஆனால்,

உன்வலிமை உணராய் உணர்வினை அறியாய்
புல்லாய்ப் புழுவாய்ப் புன்மையாய் இருந்தாய்

ஏவல் செய்யும் அடிமையாய் இருக்கவே
பூவே உனக்கும் பூச்சுகள் இடுகிறாய்
தாயே தெய்வம் என்னும் சான்றிதழ்
தங்கையே தாயெனும் மற்றுமோர் சான்றிதழ்
மகளே எனது மலரெனும் சான்றிதழ்
அத்தை யென்பதும் ஆத்தா என்பதும்
வளர வளர வரும் சான்றிதழ்களே...

இந்த நிலத்திற்கு உயிருண்டென்று
உணர்த்திக் காட்டவே
புவியில் முளைத்த புல்லென்று சொல்
பிடிவாதம், ஆணவம், கண்மூடித்தனம்
இன்னும் பலப்பல இறுக்கி வைத்த
மன்மெனும் வயலை இளகச் செய்து
அன்பும் நேர்மையும் எளிமையும் பயிற்றும்
புவியில் முளைத்த புல்லென்று சொல்.
புழுவென்று கருதிடும் புரியாதவர்க்கு...
மலட்டு மண்ணை மலத்திட வந்த
மண்புழு வென்று மலர்ந்து பேசு
தேன்தடவிய சொற்களுக்காகவே
கட்டுப் படுகிறாய் காலடி தொடுகிறாய்
ஒரு பாராட்டில் உள்ளம் குழைகிறாய்
அதட்டிப் பேசினால் அரண்டு போகிறாய்



பெண்ணே,

அன்பெனும் பேரால் ஆட்சி செய்பவளே
உன்னைப் புல்லென்று பேசுவார்
ஆம் என்று சொல்
வரண்டநிலத்தை வசியப் படுத்திப்
புன்னகை செழிக்கும் புல்லென்று சொல்.

உலகம் நடக்க உயிர்ப்புடன் விளங்க
மலர்முகம் காட்டு மகளே
இலகுக வாழ்வில் இனிதே எழுகவே...

**தமிழ்நெஞ்சம் அமின்**

pல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2020



## வரவேற்போம் சித்திரை மகளை!

உலகை உலுக்கிய நோய்த்தொற்று
ஒழிந்து இனியும் பரவாமல்
ஒழுக்கம் சுத்தம் பேணி நாம்
உன்னத வாழ்வைப் பெற்றிடவே
கலகம் இன்றி நாடெல்லாம்
கருத்தாக ஒருங்கிணைந்து
மனிதம் காத்திட வேண்டுமென்று
மனதில் ஒற்றுமை வலிமையுடன்
ஏர் பிடிக்கும் உழவரெல்லாம்
ஏற்றம் கண்டு உயர்வடைய
பார்முழுதும் நலம் காண
சார்வரி ஆண்டை வரவேற்போம்!
இயற்கை வளங்கள் பெருகட்டும்!
இலக்கியங்கள் ஒளிரட்டும்!
முயற்சிகள் யாவும் பலிக்கட்டும்!
முன்னேற்றம் மலரட்டும்!
பூக்கட்டும் புத்தாண்டு
பூச்செண்டின் பொலிவுடனே!
காக்கட்டும் மண்ணுலகைக்
கனிவுடனே இனிதாக!

**ஓசூர் மணிமேகலை**

